# நான் என்ன செய்ய வேண்டும்?

தொடர் - 47
ஆகஸ்ட் 2012

*தொகுப்பு :* **Dr. B. வில்லியம் தர்ம ராஜா**

**ஏசாயா**

2301 தேவனுக்குக் காத்திரு (64:4)
2302 கர்த்தரைப் பற்றிக்கொள் (64:7)
2303 மாதந்தோறும், ஓய்வுநாள் தோறும் கர்த்தருக்கு முன்பாகத் தொழுதுகொள் (66:33, 12:4)
2304 சத்தியத்தைக் கைக்கொள் (26:2)
2305 உன் பாதை செம்மையாயிருப்பதாக (26:7)
2306 நீதியைக் கற்றுக்கொள் (26:10)
2307 அமரிக்கையும் நம்பிக்கையுமே உன் பெலன் (30:15)
2308 தயாள குணமுள்ளவனாயிரு; தயாளமானவைகளை யோசி; தயாளமானவைகளிலே நிலைத்திரு (32:8)
2309 நீர் வளம் பொருந்திய இடங்களிலெல்லாம் விதை விதை (32:20)
2310 கொள்ளையிடாதே (33:1)
2311 துரோகம் பண்ணாதே (33:1)
2312 நீதியாய் நட (33:15)
2313 செம்மையானவைகளைப் பேசு (33:15)
2314 இடுக்கண் செய்வதால் வரும் ஆதாயத்தை வெறு (33:15)
2315 பரிதானங்களை வாங்காதபடிக்கு உன் கைகளை உதறு (33:15)
2316 இரத்தஞ்சிந்துவதற்கான யோசனைகளைக் கேளாதபடிக்கு உன் செவியை அடை (33:15)
2317 பொல்லாப்பைக் காணாதபடிக்கு உன் கண்களை மூடு (33:15)
2318 தளர்ந்த கைகளைத் திடப்படுத்தி, தள்ளாடுகிற முழங்கால்களைப் பலப்படுத்து (35:3)
2319 பயப்படாமலும் கலங்காமலும் (44:8) கர்த்தரையே பரிசுத்தம் பண்ணு (8:13)
2320 பயப்படாமல் நம்பிக்கையாயிரு; கர்த்தராகிய யேகோவா உன் பெலன்; உன் கீதம்; உனக்கு இரட்சிப்பு (12:2)
2321 "நீ பயப்படாதே; நான் உன்னுடனே இருக்கிறேன்" (41:10)
2322 "திகையாதே; நான் உன் தேவன்; நான் உன்னைப் பலப்படுத்தி, உனக்கு சகாயம் பண்ணுவேன்; என் நீதியின் வலதுகரத்தினால் உன்னைத் தாங்குவேன்" (41:10)
2323 "பயப்படாதே; நான் உனக்குத் துணை நிற்கிறேன் (41:13,14)
2324 "பயப்படாதே (44:1); உன்னை மீட்டுக் கொண்டேன்; உன்னைப் பேர் சொல்லி அழைத்தேன்; நீ என்னுடையவன் (43:1); நான் உன்னோடு இருக்கிறேன்" (43:5)
2325 மனுஷரின் நிந்தனைக்குப் பயப்படாமலும், அவர்கள் தூஷணங்களால் கலங்காமலும் இரு (51:7)
2326 சாகப்போகிற மனுஷனுக்கும், புல்லுக்கொப்பாகிற மனுபுத்திரனுக்கும் பயப்படாதே (51:12)
2327 பயப்படாதே, நீ வெட்கப்படுவதில்லை (54:4)
2328 நாணாதே, நீ இலட்சையடைவதில்லை (54:4)



2329 கர்த்தருக்குப் பயப்படு (8:13, 11:3, 33:6)
2330 மனம் பதறுகிறவர்களைப் பார்த்து : "நீங்கள் பயப்படாதிருங்கள்; திடன் கொள்ளுங்கள்; இதோ, உங்கள் தேவன் நீதியைச் சரிக்கட்டவும், உங்கள் தேவன் பதிலளிக்கவும் வருவார்; அவர் வந்து உங்களை இரட்சிப்பார்" என்று சொல் (35:4)

**எரேமியா**

2331 "நான் சிறுபிள்ளையென்று நீ சொல்லாதே, நான் உன்னை அனுப்புகிற எல்லாரிடத்திலும் நீ போய், நான் உனக்குக் கட்டளையிடுகிறவைகளையெல்லாம் நீ பேசுவாயாக. நீ அவர்களுக்குப் பயப்பட வேண்டாம்; உன்னைக் காக்கும்படிக்கு நான் உன்னுடனே இருக்கிறேன்" (1:7,8)
2332 கர்த்தருக்குப் பயப்படு (5:22); உனக்கும், உன் பின்னடியாருக்கும், உன் பிள்ளைகளுக்கும் நன்மையுண்டாகும்படி, சகல நாட்களிலும் கர்த்தருக்குப் பயப்படு. (32:39)
2333 கர்த்தருக்குப் பயந்திருப்பேன் என்று உன் இருதயத்திலே சொல் (5:24)
2334 வானத்தின் அடையாளங்களாலே புறஜாதிகள் கலங்குகிறார்களே என்று சொல்லி, நீ அவைகளாலே கலங்காதிரு (10:2)
2335 விக்கிரகங்களுக்குப் பயப்பட வேண்டாம்; அவைகள் தீமை செய்யக்கூடாது, நன்மை செய்யவும் அவைகளுக்குச் சக்தியில்லை (10:5)
2336 என்னை விட்டுத் தூரப்பட்டு, மாயையைப் பின்பற்றி, வீணராய்ப் போகாதே (2:6)
2337 என் தேசத்தைத் தீட்டுப்படுத்தாதே (2:7)
2338 என் சுதந்தரத்தை அருவருக்காதே (2:7)
2339 வீணானவைகளைப் பின்பற்றாதே (2:8)
2340 வீணானவைகளுக்காக உன் மகிமையை மாற்றாதே (2:11)
2341 "எனக்கு விரோதமாய்த் துரோகம் பண்ணாதே" (2:29, 3:20)
2342 கர்த்தரை மறந்து விடாதே (2:32)
2343 பொல்லாப்புகளைச் செய்து மிஞ்சிப்போகாதே (3:5)
2344 பொல்லாத இருதயத்தின் இச்சையின்படி நடவாதே (3:17)
2345 உன் வழியை மாறுபாடாக்கி, உன் தேவனாகிய கர்த்தரை மறவாதே (3:21)
2346 சீர்கேடுகளைச் செய்யாதே (3:22)
2347 குன்றுகளையும் திரளான மலைகளையும் நம்பாதே (3:23)
2348 கர்த்தருடைய சொல்லைக்கேள் (3:25)
2349 "நீ உன் அருவருப்புகளை என் பார்வையினின்று அகற்றிவிடு" (4:1)
2350 முள்ளுகளுக்குள்ளே விதையாதே (4:3)

## உபவாச ஜெபங்கள்

ஆகஸ்ட் 9, வியாழன், அரசு விடுமுறை, CSI ஆலயம், பெரியநாயகபுரம், தூத்துக்குடி
ஆகஸ்ட் 11, 2ஆவது சனி கிருபையின் ஆலயம், மைப்பாறை
ஆகஸ்ட் 13, 2ஆவது திங்கள் மாதாநகர், தூத்துக்குடி.
ஆகஸ்ட் 18, 3ஆவது சனி சகோ. செல்வராஜ் இல்ல வளாகம், ஸ்ரீவைகுண்டம்
ஆகஸ்ட் 18, 3ஆவது சனி ராஜா திருமண மண்டபம், மஞ்சம்பட்டி
ஆகஸ்ட் 21, 3ஆவது செவ்வாய் பிரமுத்து விளை, வடக்கூர், தூத்துக்குடி
ஆகஸ்ட் 28, கடைசி செவ்வாய் காமராஜர் திருமண மண்டபம், பிரையன்ட் நகர், தூத்துக்குடி

# விசுவாசம் – தேவன்பேரில் வைக்கும் விசுவாசம்

## *Faith in God*

*சகோ. S. ஜெபராஜ்* President, Grace Ministries

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர, சகோதரிகளுக்கு இன்ப இயேசுவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள். கடந்த இதழில் இரட்சிப்புக்கேற்ற விசுவாசம் என்ற பொருளில் தேவன் நம்மோடு கூட அநேக காரியங்களை தெளிவுபடுத்தினார். "தேவன் பேரில் வைக்கும் விசுவாசம்..." என்ற தலைப்பில் தியானிப்போம். (எபி. 6:2). 'ஆபிராம்' என்றால் உயர்வான தகப்பன் என்று பொருள். கர்த்தர் ஆபிராமுக்குத் தரிசனமாகி, இனி உன் பேர் ஆபிராம் என்னப்படாமல் ஆபிரகாம் என்னப்படும். ஆபிரகாம் என்றால் திரள் ஜனத்தின் தகப்பன் என்று பொருள். பின்னும் தேவன் ஆபிரகாமை நோக்கி உன் மனைவி சாராயை (சாராய் என்றால் என் இராணி என்று பொருள்) இனி சாராய் என்று அழையாதிருப்பாயாக சாராள் என்பது அவளுக்கு பெயராயிருக்கும் (சாராள் என்றால் உலகத்திற்கு இராணி, ஜாதிகளுக்குத் தாய் என்பது பொருள்) இப்படி தேவன் ஆபிரகாமை ஆசீர்வதித்ததற்கு காரணம், ஆபிரகாம் கர்த்தரை விசுவாசித்தான். அதை அவர் அவனுக்கு நீதியாக எண்ணினார். (ஆதி. 15:6). நீ தேவனை பூரணமாய் விசுவாசிக்கிறாயா? விசுவாசத்தில் பூரணராகும்படி கடந்து போக எடுத்த முயற்சிகள் என்ன? தேவன் பேரில் வைக்கும் விசுவாசத்தில் பூரணராக ஆபிரகாமின் வாழ்க்கையில் அவர் செய்தது என்ன?

### 1. கர்த்தருக்கு முன்பாக நிற்கும் விசுவாசம்

ஆபிரகாமோ பின்னும் கர்த்தருக்கு முன்பாக நின்று கொண்டிருந்தான். (ஆதி. 18:22). ஆபிரகாம் கர்த்தருக்கு முன்பாக நிற்கத் தகுதி உடையவராயிருந்தார். நம்மை உண்டாக்கின கர்த்தருக்கு முன்பாக நாம் பணிந்து குனிந்து முழங்காற்படியிடக்கடவோம் (சங். 95:6). பரிசுத்தம் இல்லாமல் ஒருவனும் தேவனை தரிசிக்க முடியாது. ஆபிரகாம் கர்த்தருக்கு முன்பாக நின்றதோடு மட்டுமல்ல சோதோம் கொமோரா பட்டணத்திற்காக கர்த்தரிடத்தில் பரிந்து பேசிக்கொண்டிருக்கிறார். அப்பொழுது ஆபிரகாம் சமீபமாய் சேர்ந்து (ஆதி. 18:23) இன்னும் கர்த்தரின் அருகில் நெருங்கி கிட்டச் சேருகிறான். 50/45/40/30/20/10. நீதிமான்கள் நிமித்தம் அதை அழிப்பதில்லை என்று கர்த்தர் வாக்குக் கொடுக்கும்படியாய் பேசத்துணிகிறார். தேவன் பேரில் அவர் வைத்த விசுவாசம் இந்த பெரிய தகுதியை ஆபிரகாமிற்கு வழங்கிற்று. நீ தேவ சமூகத்தில் நின்று அழிந்து போகிற ஆத்துமாக்களுக்காய் பாரத்தோடு பரிந்து பேசும் தகுதியை பெற்றிருக்கிறீர்களா? அதுவே நீங்கள் தேவன் பேரில் வைத்திருக்கும் உங்கள் விசுவாசத்தின் வளர்ச்சியை அளக்கும் அளவுகோல் என்பதை மறந்துவிட வேண்டாம். இது ஒருநாள் அனுபவமாயிராமல் ஒவ்வொரு நாளும் வாழ்க்கையின் அனுபவமாயிருக்க வேண்டும். மோசே இஸ்ரவேல் புத்திரரை அடிமைத்தன வீடாகிய எகிப்திலிருந்து பாலும் தேனும் ஓடுகிற கானான் தேசத்திற்கு வழிநடத்தும்பொழுது அவனோடு கூட பேசும்பொழுது எல்லாம் தேவன் அவனை தம்முடைய சமுகத்திற்கு முன்பாக கடந்துவரும்படி அழைப்பார். மோசே பரிசுத்தத்தோடும், பயத்தோடும், பக்தியோடும் தேவனுக்கு முன்பாக நிற்பதை வேதத்தில் காண்கிறோம்.

### 2. கீழ்ப்படிதலின் விசுவாசம்

ஆபிரகாமை குறித்து கர்த்தரே இவ்விதமாக சாட்சி கொடுக்கிறார் ஆபிரகாம் என் சொல்லுக்கு கீழ்ப்படிந்து என் விதிகளையும் என் கற்பனைகளையும் என் நியமங்களையும் என் பிரமாணங்களையும் கைக்கொண்ட படியினால் அவன் சந்ததியைப் பெருகப் பண்ணுவேன் (ஆதி. 26:4). கர்த்தர் ஆபிரகாமை நோக்கி நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பன் வீட்டையும் விட்டு.... நான் உனக்கு காண்பிக்கும் தேசத்துக்கு



போ (ஆதி. 12:1) என்றார். கர்த்தர் ஆபிரகாமுக்கு சொன்னபடியே அவன் புறப்பட்டுப்போனான். (ஆதி. 12:4). சகல ஜாதிகளும் விசுவாசத்திற்கு கீழ்ப்படியும்படிக்கு அறிவிக்கப்பட்டதுமாயிருக்கிற இரகசியமாகிய (ரோமர் 16:25). முழு நிச்சயமாய் நம்புகிற விசுவாசம் கீழ்ப்படிதலுக்கு வழி நடத்தும் தேவன் பேரில் வைக்கும் இந்த விசுவாசம், தேவன் சகலத்தையும் நன்மைக்கேதுவாய் நடத்துவார் என தேவனை அங்கீகரிக்கச் செய்யும். அன்றியும் அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம். (ரோமர் 8:28). இந்த வேதவசனத்தை நன்மைகளை சுதந்தரிக்கும் நேரங்களில் மட்டும் பயன்படுத்துவது அதற்கு புறம்பான காரியங்களை நீங்கள் சந்திக்கும்போதும் பயன்படுத்தும் போதுதான் தேவன் பேரில் நீங்கள் வைக்கும் விசுவாசம் உறுதிப்படுத்தப்படும். தேவன் விரும்புவது பலியைப் பார்க்கிலும் கீழ்ப்படிதல் (1சாமு. 15:12). காற்றும் கடலும் இயேசுவுக்கு கீழ்ப்படிந்தது (மத். 8:27). அசுத்த ஆவிகள் இயேசுவின் சத்தத்திற்கு கீழ்ப்படிந்தது (மாற். 1:27) ஆசாரியர்களில் அநேகரும் விசுவாசத்திற்கு கீழ்ப்படிந்தார்கள். (அப். 6:7) ஆகையால் பூரண கீழ்ப்படிதலை கற்றுக்கொள்வோம்.

### 3. சோதனையின் வழியாய் நடத்தும் விசுவாசம்

இராஜாவாகிய நேபுகாத்நேச்சார் பண்ணுவித்த பொற்சிலையை சகல ஜனத்தாரும், ஜாதியாரும், பாஷைக்காரரும் தாழவிழுந்து பணிந்து கொண்டார்கள் (தானி. 3:7). சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ, எரிகிற அக்கினி சூளைதான் தண்டனை என அறிந்திருந்தும், ராஜாவின் கட்டளை என்று தெளிவாய் தெரிந்திருந்தும் சிலையை பணிந்து கொள்ள மறுத்து நின்றார்கள். உங்களை என் கைக்கு தப்புவிக்கப்போகிற தேவன் யார்? (தானி. 3:15) என்று நேபுகாத்நேச்சார் கடுங்கோபத்துடன் கர்ஜித்த போதும் மூன்று பேரும் மிகத் தைரியமாய் நின்றார்கள். இதைக்குறித்து உமக்கு உத்தரவு சொல்ல எங்களுக்கு அவசியம் இல்லை. நாங்கள் ஆராதிக்கிற எங்கள் தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவராயிருக்கிறார். அவர் எரிகிற அக்கினிசூளைக்கும் ராஜாவாகிய உம்முடைய கைக்கும் நீங்கலாக்கி விடுவிப்பார். விடுவிக்காமற்போனாலும் நாங்கள் உம்முடைய தேவர்களுக்கு ஆராதனை செய்வதுமில்லை, நீர் நிறுத்தின பொற்சிலையை பணிந்து கொள்வதுமில்லை என்கிறது ராஜாவாகிய உமக்குத் தெரிந்திருக்கக்கடவது என்றார்கள் (தானி. 3:17,18). ராஜாவின் கோபம் கடுமையானாலும், எரிகிற அக்கினி ஏழுமடங்கு அதிகமாய் சூடாக்கப்பட்டாலும் அவர்கள் அஞ்சவில்லை. அவர்கள் தேவன்மீது வைத்திருந்த விசுவாசம் சோதனையின் வழியாய் ஊடுருவிச் செல்ல செயல்வீரர்களாய் மாற்றியது. ஏழுமடங்கு அதிகமாய் சூடாக்கப்பட்ட அக்கினி சூளையிலே சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்கள் தேவபுத்திரரோடு விடுதலையாய் உலாவுகிறதை ராஜா கண்டான். இவர்களை தூக்கிக்கொண்டு போன பலசாலிகளான இராணுவ வீரர்களை அக்கினி ஜுவாலை கொன்று போட்டது. இவர்கள் வெளியே வந்தபோது இவர்களது தலைமயிர் கருகாமலும், அவர்களுடைய சால்வைகள் சேதப்படாமலும், அக்கினி சரீரங்கள் மேல் பெலன் செய்யாமலும் அக்கினியின் மணம் அவர்களிடத்தில் வீசாமலும் காணப்பட்டார்கள். (தானி. 3:27) பின்பு ராஜா, இவ்விதமாய் இரட்சிக்கத்தக்க தேவன் ஒருவருமில்லை என்று பறைசாற்றுகிறான்; சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்களை பாபிலோன் தேசத்திலே உயர்த்தினான். அன்பானவர்களே! தேவன் பேரில் வைக்கும் விசுவாசம், நீங்கள் சோதனையின் ஊடே கடந்து செல்லும்பொழுது, உங்களுக்கு எதிராக செயல்படுகிறவர்களை அழித்துப்போடும். உங்களையோ அது மேன்மைப்படுத்தும், உயர்த்தும், கனப்படுத்தும் தேவன்பேரில் வைக்கும் விசுவாசத்திலேயே நிலைத்திருங்கள்.

*அன்பான ஜெபபங்காளர்களுக்கு,*

ஜெபத்தை கேட்கும் நாம் தேவனின் நாமத்தில் எழுப்புதல் வாழ்த்துக்கள்! ஜெபமே நமது ஊழியத்தின் முதல் ஆதாரமாக இருப்பதை நீங்கள் அறிவீர்கள்.

கடந்த 1981ஆம் ஆண்டு முதல் ஆகஸ்டு மாதத்தை ஜெபமாதமாக கொண்டு ஜெபித்து வருவதை ஊழியபங்காளராகிய நீங்கள் அறிவீர்கள்.

இந்த ஆண்டு விசேஷமாக முஸ்லீம் மக்கள் இரட்சிப்பிற்காய் ஜெபிக்க தேவன் பாரம் தந்தார். அதற்காக குறிப்பாக ஜெபிக்க முடிந்த அளவு குறிப்புகளை சேகரித்து தர தேவன் வழிநடத்தினார்.

கம்யூனிஷ இரும்பு திரைகளை தகர்த்த கர்த்தர், மூங்கில் திரை நாடுகளில் (ஆப்பிரிக்க நாடுகள்) எழுப்புதல் அனுப்பிய தேவன், முஸ்லீம் நாடுகளை வெண்கல கதவுகளை தகர்க்க ஜெபிக்க அழைக்கப்படுகிறோம். கடைசிகால எழுப்புதல் என்பது விக்கிரக வணக்க நாடுகளை மட்டுமல்லாது விக்கிரக வணக்கம் இல்லாத முஸ்லீம் நாடுகளையும் பற்றிபிடிக்கும் அக்கினியாகும். இந்த எழுப்புதல் அக்கினி நம் தலைமுறைகளில் உலகளாவிய எழுப்புதல் அக்கினியாய் பற்றி பிடிக்க ஊக்கமாய் ஜெபிக்க அழைக்கப்படுகிறோம். நாம் எழுப்புதலுக்காய் ஜெபிப்போராய் மட்டுமல்லாது எழுப்புதலை ருசிப்போராய் இருக்க தேவன் நம்மை பெலப்படுத்துவாராக!

ஆகஸ்டு மாதத்தில் நடைபெறும் 6 நாட்கள் உபவாச ஜெபத்தில் கலந்து கொள்ள அன்புடன் அழைக்கிறேன் (ஜுலை 30 – ஆகஸ்டு 4 முடிய) தேவனுடைய கூடாரம், ஏழாயிரம்பண்ணையில் வைத்து நடைபெறுகிறது. (இடமாற்றத்தைக் கவனியுங்கள் விராலிப்பட்டியில் இருந்து தேவனுடைய கூடாரத்திற்கு மாற்றப்பட்டுள்ளது)

மேலும் 24 மணிநேர உபவாச ஜெபத்திற்கும் அன்புடன் அழைக்கிறேன். இணைந்து ஜெபிப்போம் எழுப்புதல் அக்கினி பற்றியெரிய உபவாசித்து ஜெபிப்போம்.

*அன்புடன் ஜெபத்துடன் சகோதரன்*

**B. பொற்செல்வன் ஆசீர்**

**விருதுநகர் மாவட்டம் ஏழாயிரம் பண்ணை** *தேவனுடைய கூடாரத்தில்*

## திறப்பின் வாயில் ஜெபம்

**2012 ஆகஸ்ட் 29 கடைசி புதன் – காலை 10 மணி முதல் மாலை 3 மணி முடிய**

*நீங்களும் வாருங்கள்! கலந்து கொள்ளுங்கள்! இயேசு உங்களுக்கு அற்புதம் செய்வார்!!*

*நேரில் கலந்து கொள்ள முடியாதவர்கள் உங்கள் ஜெப விண்ணப்பங்களை எங்களுக்கு கீழ்க்கண்ட முகவரியில் அனுப்பலாம்.*

**தேவனுடைய கூடாரம்,** மெயின் ரோடு, ஏழாயிரம்பண்ணை–626 201. போன் 04562–258194

***ஊழிய தொடர்பிற்கு, காணிக்கை மற்றும் ஜெபக்குறிப்புகள் அனுப்ப***

**கிருபையின் ஊழியங்கள்**
ஆபிரகாம்நகர், பெரியநாயகபுரம்
தூத்துக்குடி–628 101.
மொபைல் :94432 89026

**தேவனுடைய கூடாரம்**
சாத்தூர் மெயின்ரோடு,
ஏழாயிரம்பன்னை–626 201
விருதுநகர்மாவட்டம்
04562–258194



# *தமிழக மாவட்டங்களுக்காய் ஜெபியுங்கள்*

ஒரு நாளைக்கு ஒரு மாவட்டம் வீதம் ஜெபிக்க பட்டியல் கொடுக்கப்பட்டுள்ளது. முழுமாவட்டத்தின் இரட்சிப்பிற்காய் ஜெபியுங்கள். விசேஷமாக முஸ்லீம் மக்கள் இரட்சிப்பிற்காக ஊக்கமாக ஜெபியுங்கள். ஒவ்வொரு மாவட்டத்திலும் முஸ்லீம் மக்களின் தோராய கணக்கீடு கொடுக்கப்பட்டுள்ளது. அதை பயன்படுத்தி ஊக்கமாக ஜெபியுங்கள்.

| நாள் | மாவட்டம் | ஜனத்தொகை | முஸ்லீம்கள் |
|---|---|---|---|
| 1 | கன்னியாகுமரி | 17 இலட்சம் | 70 ஆயிரம் |
| 2 | திருநெல்வேலி | 27 இலட்சம் | 2 இலட்சத்து 52 ஆயிரம் |
| 3 | தூத்துக்குடி | 16 இலட்சம் | 73 ஆயிரம் |
| 4 | விருதுநகர் | 18 இலட்சம் | 43 ஆயிரம் |
| 5 | மதுரை | 26 இலட்சம் | 1 இலட்சத்து 37 ஆயிரம் |
| 6 | திண்டுக்கல் | 20 இலடசம் | 90 ஆயிரம் |
| 7 | திருவண்ணாமலை | 22 இலட்சம் | 1 இலட்சத்து 60 ஆயிரம் |
| 8 | ஈரோடு | 20 இலட்சத்து 60 ஆயிரம் | 97 ஆயிரம் |
| 9 | திருச்சி | 24 இலட்சம் | 56 ஆயிரம் |
| 10 | கோயம்புத்தூர் | 40 இலட்சத்து 30 ஆயிரம் | 2 இலட்சத்து 28 ஆயிரம் |
| 11 | சிவகங்கை | 12 இலட்சம் | 60 இலட்சம் |
| 12 | இராமநாதபுரம் | 12 இலட்சம் | 1இலட்சத்து 74 ஆயிரம் |
| 13 | காஞ்சிபுரம் | 29 இலட்சம் | 1 இலட்சத்து 14 ஆயிரம் |
| 14 | அரியலூர் | 7 இலட்சம் | 8 ஆயிரம் |
| 15 | சென்னை | 1 கோடியே 10 இலட்சம் | 5 இலட்சத்து 10 ஆயிரம் |
| 16 | கடலூர் | 20 இலட்சத்து 30 ஆயிரம் | 1 இலட்சத்து 3 ஆயிரம் |
| 17 | தருமபுரி | 20 இலட்சத்து 90 ஆயிரம் | 1 இலட்சத்து 23 ஆயிரம் |
| 18 | கரூர் | 10 இலட்சம் | 37 ஆயிரம் |
| 19 | நாகப்பட்டினம் | 15 இலட்சம் | 1 இலட்சத்து 13 ஆயிரம் |
| 20 | நாமக்கல் | 15 இலட்சம் | 27 ஆயிரம் |
| 21 | நீலகிரி | 8 இலட்சம் | 73 ஆயிரம் |
| 22 | பெரம்பலூர் | 5 இலட்சம் | 25 ஆயிரம் |
| 23 | புதுக்கோட்டை | 15 இலட்சம் | 98 ஆயிரம் |
| 24 | சேலம் | 30 இலட்சம் | 78 ஆயிரம் |
| 25 | தஞ்சாவூர் | 22 இலட்சம் | 1 இலட்சத்து 63 ஆயிரம் |
| 27 | திருவ்வள்ளூர் | 27 இலட்சம் | 95 ஆயிரம் |
| 28 | திருவாரூர் | 12 இலட்சம் | 83 ஆயிரம் |
| 29 | வேலூரு | 35 இலட்சம் | 3 இலட்சத்து 50 ஆயிரம் |
| 30 | விழுப்புரம் | 30 இலட்சம் | 1 இலட்சத்து 10 ஆயிரம் |
| 31 | கிருஷ்ணகிரி | 13 இலட்சம் | 95 ஆயிரம் |

## இந்திய மாநிலங்களுக்காய் ஜெபியுங்கள்

ஒரு நாளைக்கு ஒரு மாநிலம் வீதம் ஜெபிக்க பட்டியல் கொடுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாநிலத்தின் இரட்சிப்பிற்காய் போராடி தினமும் ஜெபியுங்கள். விசேஷமாக முஸ்லீம் மக்கள் இரட்சிப்பிற்காக ஊக்கமாக ஜெபியுங்கள். ஒவ்வொரு மாநிலத்திலுமுள்ள முஸ்லீம் மக்களின் தோராய கணக்கீடு கொடுக்கப்பட்டுள்ளது. அதை பயன்படுத்தி ஊக்கமாக ஜெபியுங்கள்.

| நாள் | மாநிலம் | ஜனத்தொகை | முஸ்லீம்கள் |
|---|---|---|---|
| 1 | தமிழ்நாடு | 6 கோடியே 30 இலட்சம் | 30 இலட்சத்து 78 ஆயிரம் |
| 2 | ஆந்திரபிரதேசம் | 7 கோடியே 60 இலட்சம் | 70 இலட்சம் |
| 3 | அருணாச்சல பிரதேசம் | 10 இலட்சம் | 19 ஆயிரம் |
| 4 | அஸ்ஸாம் | 2 கோடியே 70 இலட்சம் | 80 இலட்சத்து 37 ஆயிரம் |
| 5 | பீஹார் | 8 கோடியே 40 இலட்சம் | 1கோடியே 60 இலட்சம் |
| 6 | பஞ்சாப் | 2 கோடியே 40 இலட்சம் | 3 இலட்சத்து 84 ஆயிரம் |
| 7 | மத்தியபிரதேசம் | 6 கோடி | 38 இலட்சத்து 40 ஆயிரம் |
| 8 | சத்தீஸ்கர் | 2 கோடி | 4 இலட்சம் |
| 9 | டெல்லி | 1கோடியே 30 இலட்சத்து 80 ஆயிரம் | 13 இலட்சம் |
| 10 | கோவா | 10 இலட்சம் | 60 ஆயிரம் |
| 11 | குஜராத் | 5 கோடியே 10 இலட்சம் | 46 ஆயிரம் |
| 12 | ஹரியானா | 2 கோடியே 10 இலட்சம் | 12 இலட்சத்து 18 ஆயிரம் |
| 13 | ஹிமாச்சல பிரதேசம் | 60 இலட்சம் | 1 இலட்சத்து 20 ஆயிரம் |
| 14 | ஜம்மு காஷ்மீர் | 1கோடியே 10 இலட்சம் | 70 இலட்சம் |
| 15 | ஜார்கண்ட் | 2கோடியே 70 இலட்சம் | 37 இலட்சம் |
| 16 | கர்நாடகம் | 3 கோடியே 30 இலட்சம் | 65 இலட்சம் |
| 17 | கேரளா | 3 கோடியே 20 இலட்சம் | 76 இலட்சம் |
| 18 | மஹாராஷ்ட்ரா | 9 கோடியே 70 இலட்சம் | 7 கோடியே 7 இலட்சம். |
| 19 | மணிப்பூர் | 20 இலட்சம் | 1 இலட்சத்து 80 ஆயிரம் |
| 20 | மேகலாயா | 20 இலட்சம் | 86 ஆயிரம் |
| 21 | மிஸோராம் | 10 இலட்சம் | 11 ஆயிரம் |
| 22 | நாகலாந்து | 20 இலட்சம் | 40 ஆயிரம் |
| 23 | ஒரிஸா | 3 கோடியே 70 இலட்சம் | 7 இலட்சத்து 77 ஆயிரம் |
| 24 | இராஜஸ்தான் | 5 கோடியே 70 இலட்சம் | 50 இலட்சம் |
| 25 | சிக்கிம் | 10 இலட்சம் | 14 ஆயிரம் |
| 26 | திரிபுரா | 30 இலட்சத்து 20 ஆயிரம் | 24 ஆயிரம் |
| 27 | உத்திரபிரதேசம் | 17 கோடி | 36 இலட்சம் |
| 28 | உத்ராஞ்சல் | 80 இலட்சம் | 10 இலட்சம் |
| 29 | மேற்குவங்காலம் | 8 கோடி | 2 கோடி |
| 30 | லட்சத்தீவுகள் | 60 ஆயிரத்து 700 | 59 ஆயிரத்து 500 |
| 31 | சண்டிகார் | 9 இலட்சம் | 90 ஆயிரம் |
| 31a | பாண்டிச்சேரி | 9 இலட்சத்து 70 ஆயிரம் | 1 இலட்சத்து 94 ஆயிரம் |



## உலக முஸ்லீம் நாடுகளுக்காய் தீவிரவாத இயக்கங்களுக்காய் ஜெபியுங்கள்

ஒரு நாளைக்கு 2 முஸ்லீம் நாடுகள் வீதம் ஜெபிக்க பட்டியல் 23 நாட்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு நாட்டின் தலைநகர் மற்றும் முஸ்லீம் மக்கள் சதவிகிதம் கொடுக்கப்பட்டுள்ளது. இந்நாடுகளின் இரட்சிப்பிற்காய் ஜெபியுங்கள் மற்றும் 8 நாட்களுக்கு 2 முஸ்லீம் தீவிரவாத இயக்கங்கள் வீதம் ஜெபிக்க கொடுக்கப்பட்டுள்ளது. அதை பயன்படுத்தி பாரத்தோடு ஜெபியுங்கள்.

| நாள் | | நாடு | தலைநகர் | முஸ்லீம்கள் % |
|---|---|---|---|---|
| 1 | 1 | ஆப்கானிஸ்தான் | காபூல் | 99 சதவிகிதம் |
| | 2 | அல்பேனியா | திரளா | 75 சதவிகிதம் |
| 2 | 3 | அல்ஜீரினா | அல்ஜேர் | 98 சதவிகிதம் |
| | 4 | அஜர்பஜான் | பாகூ | 93 சதவிகிதம் |
| 3 | 5 | பஹரீன் | அல்மனாமா | 99 சதவிகிதம் |
| | 6 | பங்களாதேஷ் | டாக்கா | 85 சதவிகிதம் |
| 4 | 7 | போஸானியா | சரஜீவோ | 40 சதவிகிதம் |
| | 8 | புருனே | பந்தர்செர்ரி | 67 சதவிகிதம் |
| 5 | 9 | கேமரூன் | யாவன்டே | 55 சதவிகிதம் |
| | 10 | மத்திய ஆப்ரிகா | பஸ்கூவ் | 55 சதவிகிதம் |
| 6 | 11 | ஷாத் | நீட்ஜமேனியா | 85 சதவிகிதம் |
| | 12 | தகோமே | அபோமே | 60 சதவிகிதம் |
| 7 | 13 | எகிப்து | கெய்ரோ | 93 சதவிகிதம் |
| | 14 | எத்தியோப்பியா | அடிஸ் அபாபா | 65 சதவிகிதம் |
| 8 | 15 | ஜாம்பியா | பாஞ்ஷீல் | 85 சதவிகிதம் |
| | 16 | குய்னே | கூனாக்ரி | 95 சதவிகிதம் |
| 9 | 17 | குண்னேமீசா | பீசா | 70 சதவிகிதம் |
| | 18 | இந்தோனேசியா | ஜார்தா | 95 சதவிகிதம் |
| 10 | 19 | ஈரான் | மெஹ்ரான் | 98 சதவிகிதம் |
| | 20 | கத்தார் | தோஹா | 99 சதவிகிதம் |
| 11 | 21 | குயானா | ஜார்ஜ் டவுண் | 15 சதவிகிதம் |
| | 22 | சவுதி அரேபியா | ரியாத் | 100 சதவிகிதம் |
| 12 | 23 | ஈராக் | பாக்தாத் | 95 சதவிகிதம் |
| | 24 | மெராக்கோ | ரபாத் | 99 சதவிகிதம் |
| 13 | 25 | மொசாம்பியா | பாபுத்தோ | 25 சதவிகிதம் |
| | 26 | நைஜீரியா | அபுஜா | 75 சதவிகிதம் |
| 14 | 27 | ஓமன் | மஸ்கட் | 100 சதவிகிதம் |
| | 28 | பாகிஸ்தான் | இஸ்லாமாபாத் | 97 சதவிகிதம் |
| 15 | 29 | பாலஸ்தீனா | எருசலேம் | 25 சதவிகிதம் |
| | 30 | உஸ்பெகிஸ்தான் | டாஸ்கண்ட் | 88 சதவிகிதம் |
| 16 | 31 | மேற்கு சகாரா | லாயோனி | 100 சதவிகிதம் |
| | 32 | ஏமன் | சாவ்னா | 99 சதவிகிதம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 17 | 33 | ஜோர்டான் | அமான் | 95 சதவிகிதம் |
| | 34 | காஸக்ஸ்தான் | அல்மாஅட்டா | 51 சதவிகிதம் |
| 18 | 35 | செனேகல் | டாக்ஹர் | 95 சதவிகிதம் |
| | 36 | செய்ராலியோன் | லோன்ட்ரீ டவுண் | 65 சதவிகிதம் |
| 19 | 37 | சோமாலியா | மோஹடிஷ் | 99 சதவிகிதம் |
| | 38 | சூடான் | கார்ட்டும் | 85 சதவிகிதம் |
| 20 | 39 | குவைத் | குவைத் முஸ்லீம் | 98 சதவிகிதம் |
| | 40 | கிர்கிஸ்தான் | பிஸ்கேஷ் | 76 சதவிகிதம் |
| 21 | 41 | லெபனான் | பெய்ரூட் | 57 சதவிகிதம் |
| | 42 | சூரினம் | பரமரிபோ | 25 சதவிகிதம் |
| 22 | 43 | சீரியா | தமஸ்கஸ் | 87 சதவிகிதம் |
| | 44 | லிபியா | திரிபோலி | 100 சதவிகிதம் |
| 23 | 45 | மலேசியா | கோலாம்பூர் | 52 சதவிகிதம் |
| | 46 | மாலத்தீவுகள் | குஷ்னேர் | 100 சதவிகிதம் |
| | 47 | மாலி | பமாகோ | 90 சதவிகிதம் |
| | | **தீவிரவாத இயக்கங்கள்** | | |
| 24 | 1 | ஜம்முகாஷ்மீர் விடுதலை முன்னணி | | இந்தியா |
| | 2 | காஷ்மீர் இஸ்லாமிய நண்பர்கள் | | இந்தியா |
| 25 | 3 | ஜமாத் இஸ்லாம் | | இந்தியா |
| | 4 | இந்திய முஸ்லீம் மாணவர் இயக்கம் | | இந்தியா |
| 26 | 5 | தௌஹித் ஜமாத் ஜிதாத் | | இந்தியா |
| | 6 | அல்உமா | | இந்தியா |
| | | **வெளிநாட்டு தீவிரவாத இயக்கங்கள்** | | |
| 27 | 1 | அல்குய்தா | | |
| | 2 | ஜமாத் அல்னூர் ஹமால் | | |
| 28 | 3 | ஹிஸ்புல்லா | | |
| | 4 | ஜெய்ஷ் - இ - முஹமத் | | |
| 29 | 5 | ஷாரியா அல் - முஜாகிதீன் | | |
| | 6 | அல் - உமார் - முகாகிதீன் | | |
| 30 | 7 | ஹிஸ்புல் முகாகிதீன் | | |
| | 8 | இக்வால் - உல் - முஜாகிதீன் | | |
| 31 | 9 | ஜமாத் - உல் - முஜாகிதீன் | | |
| | 10 | லஷ்கர் - இ - தொய்பா | | |

ஜெபியுங்கள்! ஜெபியுங்கள்!

**சகோ. B. பொற்செல்வன் ஆசீர் செய்தியளிக்கும் கூட்டங்கள்**

| | |
|---|---|
| **ஆகஸ்ட் 4** | **மாணவர்முகாம், பாளையங்கோட்டை** |
| **ஆகஸ்ட் 5** | **சுந்தராபுரம், கோவை** |
| **செப். 6, 7, 8, 9** | **மைலோடு, குமரி மாவட்டம்** |
| **செப். 27,28,29** | **வேலூர்** |



# முஸ்லீம் மக்களுக்காய் ஜெபியுங்கள்

***இந்திய முஸ்லீம் மக்களுடைய பிரிவு மற்றும் அவர்களுடைய பழக்கவழக்கங்கள், பண்டிகைகள், வழிபாட்டுமுறைமைகள் போன்ற குறிப்புகளுடன் முஸ்லீம் மக்களுக்காக குறிப்பாக ஜெபிக்க 31 குறிப்புகள் ஒரு நாளைக்கு ஒன்றாக ஜெபிக்க தரப்பட்டுள்ளது. இக்குறிப்புகள் முஸ்லீம் மக்களை குறித்த தெளிவையும் பாரத்தையும் உங்களுக்குத் தரும். ஆத்தும பாரத்தோடு முஸ்லீம் மக்கள் இரட்சிப்பிற்காக ஜெபியுங்கள்***

1. இந்தியாவில் அஹமதியர், பதான், அன்சாரி, காஷ்மீரி, மரைக்காயர், போரா, இராவுத்தர், லெப்பை, குஜார், மாப்பிள்ளை, ஷியா ஆகிய சுமார் 11 மக்கள் முஸ்லீம் குழுக்கள் வாழ்கின்றனர். இவர்கள் இரட்சிப்பிற்காய் ஜெபியுங்கள்.
2. ஹஸாரத், முல்லா, இமாய் போன்ற முஸ்லீம் மார்க்கத்தலைவர்கள் தேவனை அறிய
3. மதரஸா என்ற முஸ்லீம் மார்க்க போதனா மையங்களுக்காய் ஜெபியுங்கள்! இவர்கள் தங்கள் பிள்ளைகளை 4 வயது முதல் தங்கள் மார்க்க கல்வி கற்க அனுப்புகின்றர். இங்கு சுமார் 1கோடி முஸ்லீம் பிள்ளைகள் இந்தியாவில் மட்டும் பயிலுகின்றனர்.
4. மதரஸாவில் பணிபுரியும் ஆசிரியர்கள், பயிற்சியாளர்கள் இயேசுவை அறிய ஜெபியுங்கள். இங்கு இவர்கள் முக்கியமாக கிறிஸ்தவ போதனைகள் மற்றும் கிறிஸ்துவைப் பற்றிய போதனைகளான கிறிஸ்து தேவன், அவரின் மரணம், உயிர்த்தெழுதல் இவைகளுக்கு எதிரான கொள்கைகளை போதிக்கின்றனர்.
5. முஸ்லீம் மதத்தலைவர்களான ஹபேஸ், மாலாவியாஸ், இமாம், யூலிமாஸ் போன்றவர்களுக்காய் அவர்கள் இயேசுவை அறிய ஜெபியுங்கள். 6. எகிப்திலும் சீரியாவிலும் உலகில் உள்ளமற்ற எல்லா நாடுகளை காட்டிலும் அதிக மதரஸாக்கள் உள்ளன; இவ்விரு தேசங்கள் இயேசுவை அறிய ஜெபியுங்கள்.
7. தமிழகத்தில் சுமார் 30 அரபிக் கல்லூரிகள் உள்ளன. இந்தக் கல்லூரிகளில் பயிலும் முஸ்லீம் மாணவ மாணவியர்கள் மற்றும் போதிக்கும் பேராசிரியர்கள் மனந்திரும்ப
8. ஜிகாத் என அழைக்கப்படும் புனிதப் போர்புரியும் வீர பாங்கு கொண்ட முஸ்லீம்கள் இரட்சிக்கப்பட ஜெபியுங்கள். உலகில் இப்புனித போர் மூலம் தங்களுக்கு எதிரானவர்களை (பல ஆயிரம் பேரை) கொன்று வருகின்றனர். செப்டம்பர் மாதம் 11ம் தேதி 2001 முதல் 2012 மே முடிய 18,725 ஜிகாத் உலகளவில் நிகழ்ந்துள்ளன.
9. முஸ்லீம்களின் பண்டிகைகளான மிலாடி நபி, ரமலான், பக்ரித், ஈத் இவைகளை கொண்டாடுவோர் இயேசுவை அறிய ஜெபியுங்கள்.
10. ஹஜ் என்ற புனித பயணம் மேற்கொள்ளும் முஸ்லீம்கள் இயேசுவை அறிய
11. முஸ்லீம் மக்கள் தொகையில் உலகளவில் பெண்கள் 50 சதவிகிதம் உள்ளனர். ஒரு முஸ்லீம் 5 பெண்களை திருமணம் செய்யலாம் என அவர்கள் மார்க்கம் கூறுகிறது. இந்த பாதக நிலைமாற பெண்கள் முஸ்லீம் சமுதாயத்தில் சம அந்தஸ்து பெற
12. தலாக் என்கிற முஸ்லீம் விவாகரத்து முறைமை மாற ஜெபியுங்கள். முஸ்லீம் ஆண் 3 முறை தலாக் சொல்லிவிட்டால் அந்த முஸ்லீம் பெண் விவாகரத்து செய்யப்படுவாள்.
13. முஸ்லீம் மசூதிகளுக்காய் ஜெபியுங்கள். விக்கிரகம், சிலை இல்லாத இந்த மசூதிகளில் உலகமெங்கும் இயேசுவின் சுவிசேஷம் பரவிட ஜெபியுங்கள்.
14. தர்ஹா என அழைக்கப்படும் முஸ்லீம் புனிதர்களின் கல்லறைகளில் தொழுவோர்

இரட்சிக்கப்பட ஜெபியுங்கள்.

15. முஸ்லீம் தர்ஹாக்களில் நடைபெறும் ஆவி வணக்கம் மாந்திரிக செயல்கள், குறி சொல்லுதல் போன்றவற்றை நம்பி செல்லும் முஸ்லீம்கள், மற்ற மதத்தினர் மனந்திரும்ப ஜெபியுங்கள்.
16. சூபிகள் என அழைக்கப்படும் முஸ்லீம் மார்க்க குழுவினர்களுக்காய் ஜெபியுங்கள். அவர்கள் இயேசுவை அறிய மனந்திரும்ப ஜெபியுங்கள்.
17. உலகளாவிய முஸ்லீம் ஜனத்தொகையில் 15 வயதிற்கு கீழ்ப்பட்ட சிறுவர்கள் 25 சதவிகிதம் இந்த சிறுவர்கள் சிறுவர் ஊழியங்கள் மூலம் சந்திக்கப்பட ஜெபியுங்கள்.
18. உலக மொத்த முஸ்லீம் மக்கள் தொகையில் 10 சதவிகித முஸ்லீம்கள் இந்தியாவில் வாழ்கின்றனர். இந்தியா ஒரு பெரிய முஸ்லீம் நாடு. இந்திய முஸ்லீம்கள் மனந்திரும்ப ஜெபியுங்கள். (16 கோடி முஸ்லீம்கள் இந்தியாவில் உள்ளனர்)
19. உலக கிறிஸ்தவ திருச்சபைகள் முஸ்லீம் மக்கள் மத்தியில் தீவிர சுவிசேஷ அறிவிப்பு பணியில் ஈடுபட ஜெபியுங்கள்.
20. ஒவ்வொரு மசூதியிலும் செயல்படும் ஜமாத் என்ற ஸ்தல அமைப்புகளில் உள்ள தலைவர்கள் உறுப்பினர்கள் இயேசுவை ஏற்றுக்கொள்ள ஜெபியுங்கள்.
21. முஸ்லீம் இலக்கிய பணிக்குழுக்கள் பல உலகளவில், தேசிய அளவில், மாநில அளவில் செயல்படுகின்றன. இதனை நடத்தும் ஒருங்கிணைப்பாளர்கள் மனந்திரும்பி இயேசுவை ஏற்றுக்கொள்ள ஜெபியுங்கள்.
22. முஸ்லீம் எழுத்தாளர்கள் (உலகளவில், இந்தியாவில், மாநிலங்களில்) இயேசுவைக் அறிந்து மனந்திரும்ப ஜெபியுங்கள்.
23. பிரசித்திப் பெற்ற பல துறை சார்ந்த முஸ்லீம் தலைவர்கள் டாக்டர் அப்துல்கலாம், A.R. ரஹ்மான் போன்றோர் மனந்திரும்பி இயேசுவை ஏற்றுக்கொள்ள ஜெபியுங்கள்.
24. முஸ்லீம்கள் மத்தியில் உள்ள பால்ய திருமணம் தடுக்கப்பட ஜெபியுங்கள்.
25. இந்தியாவிலும் உலகளவிலும் உள்ள முஸ்லீம் தீவிரவாத அமைப்புகள் தேவனால் தேவஅன்பு நிறைந்ததாய் மாற்றி அமைக்கப்பட ஜெபியுங்கள்.
26. மாணவர்கள் மத்தியில் செயல்படும் சிமி (SIMI) - STUDENTS ISLAMIC MOVEMENT - INDIA - என்ற அமைப்பு திரு. முகமது அஹமதுல்லா சித்திக் என்பவரால் தொடங்கியது. இதில் உள்ள முஸ்லீம் மாணவ சமுதாயம் இரட்சிக்கப்பட
27. அகில இந்திய முஸ்லீம் தனி நபர் சட்ட குழுமம் All India Islamic Personal Law Board என்ற 336 உறுப்பினர்களை கொண்ட இந்த குழுமம் மனந்திரும்ப இயேசுவின் சுவிசேஷம் அறிவிக்கும் குழுமமாக மாற ஜெபியுங்கள்.
28. இந்தியாவில் செயல்படும் வெளிநாட்டு தீவிரவாத இயக்கங்கள் செயல்பாடுகள் நாட்டின் சமாதானத்தை கெடுக்காதபடி ஜெபியுங்கள். தீவிரவாதிகள் மனந்திரும்ப
29. இந்தியாவில் செயல்படும் இந்திய முஸ்லீம் தீவிரவாத இயக்கங்கள் கிறிஸ்துவின் அன்பை அறிவிக்கும் இயக்கங்களாக மாற ஜெபியுங்கள்.
30. நமது கிருபையின் ஊழியங்கள் மூலம் தூத்துக்குடி மாவட்டத்தில் நடைபெறும் பேட்மாநகரம் பணித்தளம் முஸ்லீம்கள் மத்தியில் உள்ளது. இந்த பணி மூலம் முஸ்லீம்கள் மனந்திரும்பி இரட்சிக்கப்பட ஜெபியுங்கள்.
31. நமது கிருபையின் ஊழியங்களுக்கு முஸ்லீம் மக்கள் மத்தியில் பணி செய்ய ஆத்ம பாரம், தரிசனம் கொண்ட மிஷனெரிகள் எழும்ப, தேவன் தர ஜெபியுங்கள்.



# பொதுவான ஜெபக்குறிப்புகள்

**ஊழியங்களுக்காய் ஜெபியுங்கள்.**

1. அப். 6:4இன்படி தேவ ஊழியர்கள் ஜெபம் பண்ணுவதிலும் தேவவசனத்தைப் போதிக்கிற ஊழியத்திலும் இடைவிடாமல் தரித்திருக்க ஜெபியுங்கள்.
2. சங். 119:148இன்படி தேவ வசனத்தை தியானிக்க குறித்த ஜாமங்களுக்கு முன்னே தேவ ஊழியர்கள் விழித்துக் கொள்ள ஜெபியுங்கள்.
3. சங். 119:113இன்படி தேவ ஊழியர்கள் வீண்சிந்தனைகளை வெறுத்து வேதத்தில் பிரியமாயிருக்க ஜெபியுங்கள்.
4. சங். 33:18,19இன்படி கர்த்தரின் கண்கள் தேவ ஊழியர்களை விடுவிக்கவும், காக்கவும் அவர்கள் மேல் நோக்கமாயிருக்க ஜெபியுங்கள்.
5. எபே. 5:14இன்படி தேவஊழியர்கள் கிறிஸ்துவினால் பிரகாசிக்கப்பட ஜெபியுங்கள்.
6. எபே. 6:6இன்படி தேவ ஊழியர்கள் மனுஷருக்குப் பிரியமாயிருக்க விரும்புகிறவர்களாகப் பார்வைக்கு ஊழியஞ்செய்யாதிருக்க ஜெபியுங்கள்.
7. எபே. 6:6இன்படி கிறிஸ்துவின் ஊழியக்காரராக மனப்பூர்வமாய் தேவனுடைய சித்தத்தின்படி ஊழியஞ் செய்யும் ஊழியர்களாய் மாற ஜெபியுங்கள்.
8. உபா. 28:12இன்படி தேவ ஊழியர்கள் கடன் வாங்காது ஊழியம் செய்ய, குடும்பம் நடத்த ஜெபியுங்கள்.
9. அப். 3:16இன்படி சர்வாங்க சுகத்தை மக்களுக்கு கொடுக்கும் விசுவாசம், குணமாக்கும் வரங்கள் தேவஊழியர்கள் யாவருக்கும் உண்டாக
10. அப். 5:17-25இன்படி சுவிசேஷத்திற்கு எதிராக கிரியை செய்கிற மனுஷீக அதிகாரத்திற்குப் பயப்படாமல் ஜீவ வார்த்தையை விடுதலையோடு தேவஊழியர்கள் பிரசங்கிக்க ஜெபியுங்கள்.

**சமூகப் பிரச்சனைகளுக்காய் ஜெபியுங்கள்.**

11. நீதி. 23:29-35இன்படி மது குடிக்கிற மக்கள் ஆபகூக் 2:15 உணர்வடைந்து மனந்திரும்ப இந்தியா முழுவதும் குறிப்பாக தமிழ்நாட்டில் மதுபான கடைகள் மூடப்பட ஜெபியுங்கள்.
12. ஆபகூக் 2:6இன்படி தன்னுடையதல்லாததை தனக்காக சேர்த்துக் கொள்ளத்துடிக்கும், இலஞ்சம் வாங்கும் அதிகாரிகள், அரசியல்வாதிகள், அரசு ஊழியர்கள் அவர்களின் ஏஜென்டுகள் தங்களுக்கு ஐயோ என்ற பயங்கரத்தை உணர்ந்து மனந்திரும்ப
13. ஆமோஸ் 8:4-7இன்படி எளியவர்களை பணம் கொடுத்து, இலவசம் (விலையில்லா பொருள்) கொடுத்து வஞ்சிக்கும் அரசியல் வாதிகள், அரசாங்கங்கள் கர்த்தரால் உண்டாகும் பயங்கரத்தை கண்டு மனந்திரும்ப
14. சங். 68:6இன்படி தேவன் தனிமையானவர்களுக்கு வீடுவாசல்களை ஏற்படுத்திக் கொடுக்க ஜெபியுங்கள்.
15. 1யோவா. 5:21 நமது தேசத்தை விட்டு விக்கிரக ஆராதனை, விபச்சாரம் ஆகிய பாவங்கள் விலகி ஓட

**கிறிஸ்தவ விசுவாசிகளுக்காய் ஜெபியுங்கள்**

16. அப். 14:22இன்படி அநேக உபத்திரவங்களின் வழியாய் செல்கிற விசுவாசிகள் சோர்ந்துபோகாமல் விசுவாசத்தில் பலப்பட
17. எரேமியா 10:2இன்படி கிறிஸ்தவர்கள் புறஜாதிகளுடைய மார்க்கத்தை கற்றுக்கொள்ளாதிருக்க..
18. 2தீமோ. 2:16இன்படி கிறிஸ்தவ விசுவாசிகள் சீர்கேடான வீண் பேச்சுகளுக்கு விலகி இயேசுவை பிறருக்கு அறிவிக்க
19. சங். 91:4இன்படி, உபா. 8:18இன்படி தேவனுடைய பிள்ளைகள் ஆசீர்வதிக்கப்பட
20. ஏசாயா 8:18இன்படி கிறிஸ்தவ குடும்பங்கள் சாட்சியாக அற்புதங்களும் அடையாளங்களுமாய் வாழ

**சபைகளுக்காய் ஜெபியுங்கள்**

21. அப். 2:46இன்படி சபைகள் மத்தியில் ஒருமனம், ஐக்கியம், ஒற்றுமை காணப்பட ஜெபியுங்கள்.
22. அப். 2:47இன்படி அனைத்து சபைகளிலும் ஆத்துமாக்கள் அனுதினம் சேர்க்கப்பட ஜெபியுங்கள்.
23. அப். 5:33இன்படி சபைகளில் பூரண கிருபை உண்டாயிருக்க ஜெபியுங்கள்.
24. அப். 3:6இன்படி இயேசுவின் நாமத்தின் வல்லமை சபைகளில் பூரணமாய் வெளிப்பட
25. அப். 12:24இன்படி சபைகளில் தேவ வசனம் வளர்ந்து பெருக

**நமது ஊழியங்களுக்காய்**

26. சகோ. பொற்செல்வன் ஆசீர், சகோ. ஜெபராஜ் கலந்து கொள்ளும், செய்தியளிக்கும் கூடுகைகள், நற்செய்தி கூட்டங்களை தேவன் ஆசீர்வதிக்க ஜெபியுங்கள்.
27. கிருபையின் ஊழியங்கள் மூலம் சந்திக்கப்படும் மாவட்டங்களான திருப்பூர், ஈரோடு, திருச்சி, திண்டுக்கல், மதுரை, விருதுநகர், நெல்லை, தூத்துக்குடி, குமரி, சென்னை ஆகியவற்றில் தேவன் இன்னும் புதிய பணித்தளங்களைத் தர ஜெபியுங்கள்.
28. வாலிபர் மத்தியில் நடைபெறும் இயேசுவோடு இனிய வாலிபர் மாலை, மாதாந்திரக் கூடுகைகள் (தூத்துக்குடி, சாயர்புரம், ஸ்ரீவைகுண்டம், சிவகாசி, திருவேங்கடம், சாத்தூர், விருதுநகர், மஞ்சம்பட்டி) கூடுகைகள் மூலம் அநேக வாலிபர்கள் இரட்சிக்கப்பட ஜெபியுங்கள்.
29. கிருபையின் ஊழியங்கள் மூலம் நடைபெறும் அற்புதத்தின் மாலை கூடுகைகள் (பாளையங்கோட்டை, ஆலங்குளம், அம்பை, திருவேங்கடம்) மூலம் வசன தெளிவை தேவ ஜனங்கள் பெற்றுக்கொள்ள ஜெபியுங்கள்.
30. கிருபையின் ஊழியங்கள் மூலம் நடைபெறும் அற்புத உபவாச ஜெபங்கள் (தூத்துக்குடி, ஸ்ரீவைகுண்டம், மைப்பாறை, மஞ்சம்பட்டி) மூலம் ஜெபிக்கும் ஜெப வீரர்களை தேவன் ஏராளம் எழுப்ப ஜெபியுங்கள்.
31. இதுவரை பணி நடைபெறாத தமிழகத்தில் மற்ற மாவட்டங்களில் இந்த ஆண்டு புதிய பணித்தளங்கள் திறக்கப்பட தேவன் மிஷனெரிகளை தர ஜெபியுங்கள்.



## தேவனைத் துதியுங்கள்

1. **பணித்தளம் : பட்டாண்டி விளை** – அம்மாள் தோப்பு என்ற புதிய கிராமத்தில் VBS நடைபெற்றதற்காக... மங்கலகுறிச்சியில் VBS-ல் கலந்து கொண்டு இரட்சிக்கப்பட்ட உச்சிமாகாளிக்காக... 13 இடங்களில் VBSல் நடைபெற்ற கர்த்தர் கிருபை செய்ததற்காக...
2. **பணித்தளம் : ஸ்ரீ மூலக்கரை** – ஆலய ஆராதனைக்கு வந்த பிள்ளைகள் யாவரையும் பாஸ் பண்ண செய்ததற்காக... விவசாயத்தை ஆசீர்வதித்ததற்காக... ஆலயத்திற்கு தேவன் கொண்டு வருகிற நபர்களுக்காக... சகோ. மந்திரமூர்த்தி மதியரசி இவர்களுக்கு உடல்நலத்தை தந்து, குழந்தை பாக்கியம் தந்ததற்காக...
3. **பணித்தளம் : பேட்மாநகரம்** – சகோ. மணி, சகோதரி விஜயா, சிறுமி ரோஸி அவர்களுக்கு காணப்பட்ட காய்ச்சலில் இருந்து தேவன் பரிபூரண சுகத்தைக் கொடுத்ததற்காக... புதியதாக ஆராதனைக்கு வரும் ஒரு சகோதரிக்காக... இந்த வருடத்தில் 8 VBS நடத்த தேவன் உதவி செய்ததற்காக...
4. **பணித்தளம் : ஆண்டாள்நகர்** – கடந்த மாத வல்லமை முகாமிற்கு சகோ. தேவதாஸ் மாங்காய் கொடுத்து உதவியதற்காக... முதியோர் இல்லத்தில் இருக்கும் பெரியவர்கள் காணிக்கை தந்ததற்காக... இங்கு பணித்தளத்தில் மிஷனெரி தங்கும் இல்லத்தில் எரிந்து கிடந்த மீட்டர் பெட்டி, மோட்டார், சுவிட்ச் போர்டு, பெல்ட் வாங்கி கொடுத்த சகோதரி லட்சுமி அவர்கள் குடும்பத்தை தேவன் ஆசீர்வதிக்க இவர்கள் குடும்பம் இரட்சிக்கப்பட
5. **பணித்தளம் : தட்டாப்பாறை** – புதிய ஆத்துமாக்களுக்காக... சுடலை என்ற நபர் சந்திக்கப்பட்டு, சுகம் பெற்று, குடும்பமாய் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டதற்காக....
6. **பணித்தளம் : அழகப்பபுரம்**– பெருமளஞ்சி ஜானகி அம்மாள் மகள் பாரதிக்கு திருமண வாழ்க்கையை கர்த்தர் வாய்க்க செய்ததற்காக... சகோதரி. அஜிதாவிற்கு முதல் பெண் குழந்தையை தந்ததற்காக.... முத்துராஜபுரம் சகோதரி ஜெமிலாவுக்கு திருமணம் நடைபெற்ற கர்த்தர் கிருபை செய்ததற்காக... சகோதரி. ஜீவாவிற்கு இரண்டாவது ஆண் குழந்தையை கர்த்தர் தந்ததற்காக...
7. **பணித்தளம் : திருவேங்கடம்** – இப்பணித்தளத்தில் கொடுக்கான்பட்டி, செல்லம்பட்டி, ஆவுடையார்புரம், வெள்ளாகுளம், உமைய தலைவன்பட்டியில் நடைபெற்ற VBSக்காக.... ஞானஸ்நானம் பெற்ற சகோதரி. விஜி, ரோஸிக்காக.... திருவேங்கடத்தில் ஆலயம் கட்ட இந்த பேரூராட்சியில் தடையில்லா சான்று கடிதம் கிடைத்ததற்காக.... தொடர்ந்து மாவட்ட ஆட்சியாளரிடம் அனுமதி கிடைக்க... சகோதரி. ரெபேக்காள் +2வில் தேர்ச்சி பெற்றவர்களுக்காக... சத்திரப்பட்டியில் ஞானஸ்நானம் பெற்ற 2 பேருக்காக...
8. **பணித்தளம் : ஏழாயிரம்பண்ணை** – சிவசங்குபட்டி கிராமத்தில் புதிதாக முத்துமாரி என்ற சகோதரியின் வீட்டில் பெண்கள் ஜெபம் ஆரம்பித்துள்ளோம் இதற்காக கர்த்தரைத் துதிப்போம். சாந்தி என்ற தங்கை 10ம் வகுப்புத் தேர்வில் வெற்றியைக் கொடுத்ததற்காக... தம்பி சேகருக்கு கர்த்தர் நல்ல வேலையைக் கொடுத்ததற்காக... கோவில் செல்லையாபுரம் என்ற ஆலயமில்லா கிராமத்தில் எவ்வித தடையின்றி VBS நடத்துவதற்கு தேவன் கிருபை செய்ததற்காக... நடுச்சூரங்குடி என்ற கிராமத்தில் சூதாட்டம் விளையாடுகிற மடத்தில் VBS நடத்த தேவன் கிருபை செய்ததற்காக...

9. **பணித்தளம் : சிவகாசி** – ஜெபக்குழு மாணவ மாணவிகள் டெய்சி, இவாஞ்சலின், செல்வராஜ், கிரிஜா ஆகியோர்களுக்கு +2 அரசு தேர்வில் தேவன் கொடுத்த வெற்றிக்காக... ஈஞ்சாார் – பவுல் ஆண்டனி உண்டு உறைவிட பள்ளியில் புதிதாக VBSநடைபெற்றதற்காக.... அம்மாபட்டி, ல. புதூர் ஆகிய கிறிஸ்தவர் இல்லாத கிராமங்களில் VBS மூலம் ஊழியம் நிறைவேற்ற தேவன் கொடுத்த கிருபைக்காக...

10. **பணித்தளம் : பண்டுதன்பட்டி** – சகோ. முருகனுக்கு விபத்தில் ஏற்பட்ட பிரச்சனையில் தலைவலியிலிருந்து விடுதலை கிடைத்ததற்காக... சகோதரி. மரியாள் வாகன விபத்தில் சிறிய காயங்களுடன் தப்ப வைத்ததற்காக... சகோதரி. வனிதாவிற்கு சுகப்பிரசவத்தில் பெண் குழந்தையைக் கொடுத்ததற்காக... சகோதரி. உமா மகேஸ்வரிக்கு ஆசிரியை பணி கிடைத்ததற்காக...

11. **பணித்தளம் : என் திருவேங்கடபுரம்** – நாட்டாமை மருமகளுக்கு ஜுன் 2ம் தேதி இரவு சுகப்பிரசவத்தில் ஆண் குழந்தை பிறந்துள்ளது. அதற்காக... சகோ. பீட்டர், சகோதரி. எலிசபெத் ஏழாயிரம் பண்ணையில் ஞானஸ்நானம் பெற்றதற்காக... சகோ. அறிவழகன் குடிப்பழக்கத்தை நிறுத்தியதற்காக... சகோதரி பிரேமாவின் தாயார் சமுத்திரக்கனி டிப்பார்ட்மென்ட் பரீட்சையில் தேறினதற்காக... இங்கு நடைபெற்ற கட்டிட வேலை நிறைவு பெற்றதற்காக...

12. **பணித்தளம் : திரளி** – கர்த்தருடைய கிருபையால் ஆலய வயரிங் வேலை முடிக்க கர்த்தர் உதவி செய்ததற்காக... முத்துசெல்வி என்ற எப்சிபாவுக்கு ஆசிரியை வேலை கிடைத்ததற்காக... இந்த ஆண்டு சிறுவர் முகாம், வாலிபர் முகாம் மற்றும் குடும்ப முகாம்களை நடத்தித் தரப்போவதற்காக...

13. **பணித்தளம் : பெங்கலூர்** – தொட்டிப்பாளையத்தில் விசுவாசி ஜெபலீலாவின் வீட்டுக்குள் கட்டுவிரியன் பாம்பு ஒன்று புகுந்தும், தீங்கிலிருந்து கர்த்தர் பாதுகாத்ததற்காக சின்னகாட்டூரில் ஜெபகூட்டத்தில் பங்குபெறும் மாணவி சுமதி 10ம் வகுப்பில் 422 மதிப்பெண் எடுத்து வெற்றி பெற்றதற்காக... கிராமத்திலிருந்து ஒதுக்கி வைக்கப்பட்ட சகோ. ஆனந்தராஜ் குடும்பத்திடம் கிராமமே சமாதானமாகும்படி கிருபை செய்ததற்காக... கெங்க நாயக்கன் பாளையம் விசுவாசி அர்ஜுன் தனது ரேஷன் கார்டை திருப்பூரில் வைத்து தொலைந்து போயிற்று. ஜெபம் பண்ணிய பின் இரண்டு மாதம் களித்து அந்த கார்டு கிடைத்ததற்காக....

14. **பணித்தளம் : தோப்புபட்டி** – தேவனுடைய பெரிதான கிருபையினாலும், இரக்கத்தினாலும் திட்டமிடப்பட்ட அனைத்து கிராமங்களிலும் அந்தத் தடையுமில்லாதபடி VBS நடத்துவதற்கு போதுமான இடத்தையும் தன்னார்வ ஊழியங்களையும் ஏற்ற கால சூழ்நிலைகளையும், அதற்கேற்றபடி நல்ல திறந்த வாசல்களையும் தேவன் கொடுத்ததற்காக...

15. **பணித்தளம் : என். திருவேங்கடபுரம்** – இருவர் (14-6-2012) அன்று ஞானஸ்நானம் பெற்றுச் சபையில் சேர்க்கப்பட்டதற்காக...

16. **பணித்தளம் : செந்நெல்குளம்** – 6 பேர் ஞானஸ்நானம் பெற்று சபையில் (8-7-2012) சேர்க்கப்பட்டதற்கா

17. **பணித்தளம் : அழகப்பபுரம்** – 7 பேர் ஞானஸ்நானம் பெற்று சபையில் (12-7-2012) சேர்க்கப்பட்டதற்காக

18. **கன்னித்தேவன் பட்டி** என்ற ஆலயமில்லா கிராமத்தில் ஆலயம் கட்ட அனுமதி



கிடைத்தமைக்காக துதியுங்கள்.

19. **நள்ளி, அய்யனேரி** ஆகிய ஆலயமில்லா கிராமங்களில் ஆலயம் கட்ட அனுமதி கிடைக்க துதியுங்கள்.

20. **சின்னக்காளான்பட்டி** என்ற ஆலயமில்லா கிராமத்தில் ஆலயத்திற்கு இடம் வாங்க அட்வான்ஸ் கொடுக்கப்பட்டுள்ளது (தேவை ரூ. 3 இலட்சம்) துதியுங்கள்.

21. **மாலையூரணிப்பட்டி** என்ற ஆலயமில்லா கிராமத்தில் ஆலயம் கட்ட இடத்தை தேவன்தர துதியுங்கள்.

22. **முத்துசாமிபுரம்** என்ற ஆலயமில்லா கிராமத்தில் ஆலயத்திற்கு இடம் கிடைக்க உள்ள தடை நீங்க துதியுங்கள்

23. **தொட்டிப்பாளையம்** என்ற ஆலயமில்லா கிராமத்தில் சீக்கிரம் ஆலயம் கட்டப்பட துதியுங்கள்.

24. **திருப்புளியங்குடி** கிராமத்தில் கட்டப்படும் ஜெபவீடு சீக்கிரம் கட்டி முடிக்கப்பட துதியுங்கள்.

25. **பேட்மாநகரம்** என்ற ஆலயமில்லா கிராமத்தில் சீக்கிரம் ஆலயம் கட்டப்பட துதியுங்கள்

26. **புதுச்செந்நெல்குளம்** என்ற ஆலயமில்லா கிராமத்தில் நடைபெற்ற (ஜுலை 6,7 தேதிகளில்) நற்செய்தி கூட்டத்திற்காய் துதியுங்கள்.

27. தோப்புப்பட்டி மிஷனெரி இல்லம் விரைவாய் கட்டி முடிக்கப்பட, தேவைகள் சந்திக்கப்பட துதியுங்கள்.

28. சாத்தூர் பணித்தள மிஷனெரி இல்லம் விரிவாக்கப்பட்டு கட்டப்பட துதியுங்கள்.

29. தூத்துக்குடி தலைமை அலுவலக விரிவாக்க கட்டிடம் விரைவாய் கட்டி முடிக்கப்பட துதியுங்கள்.

30. நமது ஊழியத்திற்கு இசைத்தாலந்துள்ள ஊழியர்களை தேவன் தர துதியுங்கள்.

31. நமது ஊழியத்திற்கு புதிய மிஷனெரி குடும்பங்களை தேவன் தர துதியுங்கள்.

## VBS நடைபெற்ற கிராமங்கள் சென்ற மாத தொடர்ச்சி

| | | |
|---|---|---|
| பணித்தளம் : திருக்களூர் | பணித்தளம் : தூத்துக்குடி ரூரல் | பணித்தளம் : நள்ளி |
| 268 திருக்களூர் | 279 லூர்த்தம்மாள்புரம் காலனி | 287 கஞ்சம்பட்டி |
| 269 தேமான்குளம் | பணித்தளம் : மஞ்சம்பட்டி | பணித்தளம் : புல்லலக்கோட்டை |
| 270 செம்பூர் | 280 ஜிப்சி சிறுவர் இல்லம் | 288 குராயூர் கிழக்கு |
| 271 மானாட்டூர் | (ஆலத்தூர்) | பணித்தளம் : N.திருவேங்கிடபுரம் |
| பணித்தளம் : கீழத்தட்டப்பாறை | பணித்தளம் : அழகப்பபுரம் | 289 கோடாங்கிபட்டி |
| 272 கீழத்தட்டப்பாறை | 281 கீக்குளம் | பணித்தளம் : சிவகாசி |
| 273 மேலத்தட்டப்பாறை | பணித்தளம் : பழைய அப்பனேரி | 290 முத்துசாமிபுரம் காலனி |
| 274 கேம்ப் தட்டப்பாறை | 282 கொளக்கட்டாகுறிச்சி | பணித்தளம் : 7000பண்ணை |
| பணித்தளம் : பட்டாண்டிவிளை | பணித்தளம் : அய்யனேரி | 291 தூங்காரெட்டிபட்டி |
| 275 கணேஷபுரம் | 283 சங்கரபாண்டியபுரம் | 292 ஏழாயிரம்பண்ணை |
| 276 தொட்டியன்குடியிருப்பு | பணித்தளம் : ஊத்துக்குளி | பணித்தளம் : தொப்பம்பட்டி |
| பணித்தளம் : புதுக்கோட்டை | 284 சுப்பனூர் | 293 கோட்டூர் |
| 277 மீனாட்சிப்பட்டி கிழக்கு | பணித்தளம் : புல்லக்கவுண்டன்பட்டி | பணித்தளம் : பிச்சிவிளை |
| பணித்தளம் : தாளமுத்துநகர் | 285 பாறைப்பட்டி | 294 பிரசாத்நகர் |
| 278 ICM School | 286 கொம்மங்கியாபுரம் | 295 இம்மானுவேல்புரம் |

# “என்னை உமது இதயத்திற்கு ஏற்றவனாக்கியருளும்”

ஆஸ்வால்டு ஜே. ஸ்மித்

எனது 38வது பிறந்த நாளாகிய 1927ம் வருடம் நவம்பர் மாதம் 8ம் தேதியன்று நான் பின்வருமாறு ஜெபித்தேன். அதாவது “ஆண்டவரே என்னை உமது இருதயத்திற்கு ஏற்றவனாக்கியருளும்” என் ஊழியம் எனக்குமுன் இருக்கவில்லை; நான் விரும்பிச் செய்யும் மற்ற அநேக காரியங்கள் எனக்கு முக்கியமானதாகத் தோன்றவில்லை; தேவனுடைய பார்வையில் என் சொந்த அந்தரங்க ஜீவியம் எப்படிக் காணப்படுகிறது என்பதே எனக்குப் பிரதானமாயும், அதுவே உண்மையில் பிரயோஜனமுள்ளதாயும் இருந்தது. என் வாசிப்பு அறையில் அந்நாளில் அங்குமிங்குமாக உலாவிக் கொண்டிருக்கையில் நான் மன்றாடி ஆவியில் விண்ணப்பஞ் செய்ததாவது, “ஆண்டவரே என்னை உமது இருதயத்திற்கு ஏற்றவனாக்கியருளும்” என்பதே.

இதற்கு முன் ஒரு பொழுதும் கண்டிராதபடி, நான் செய்யும் வேலையும், நான் வாசிக்கும் புத்தகங்களும், நான் செய்யும் பிரசங்கங்களும், அதைக் கேட்கக் குழுமிவரும் ஆட்களும், அவைகளினால் அடையும் சித்தியும் எனக்குப் பிரமாதமாய்த் தோன்றவில்லை. அதற்கு மாறாக என் சொந்த வாழ்க்கையும், என் மனதின் நினைவும், என் இருதயத்தின் தூய்மையும், நீதிநெறியான என் நடக்கையும், ஒரே வார்த்தையில் கூற வேண்டுமானால், தேவாவியின் துணையினால் கிறிஸ்துவின் சாயலாக நான் மறுரூபமாகும் விஷயமுமே எனக்கு மகா பெரிய காரியமாகத் தோன்றியது.

“ஆ, தேவனோடு நான் நெருங்கி ஜீவிக்க வேண்டுமே” என்ற சொற்கள், முன் ஓர் நாளும் நான் நினைத்திராவண்ணம் நூதனக் கருத்துடன் மிகவும் ஆழமாய் என் மனதில் பதிந்தது. அப்படிப்பட்ட ஓர் அனுபவத்தை ஆசித்து என்னுள்ளம் கதறலாயிற்று. அவரை அறிந்து கொள்ள வேண்டும் என்றிருக்கிறேன் என்று பிரதான அப்போஸ்தலன் பிரார்த்தித்தான். மேலும் அவன் “கிறிஸ்து உங்களுக்குள் இருக்கிறார்” என்றும் “கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்”, என்றும் பகர்ந்தான். ஆம், நோவா தேவனோடு சஞ்சரித்துக் கொண்டிருந்தான். ஏனோக்கு தேவனோடு சஞ்சரித்துக் கொண்டிருந்தான். ஆனால் நான் அப்படி செய்ய முடியுமா? என் ஊழியம் என் உடைமை இவற்றைப் பார்க்கிலும் நானே தேவனுக்கு மிகவும் மேன்மையாய் இருக்கிறேன் அல்லவா? எனது பணிவிடையை மட்டும் அல்ல, என்னையே தேவன் விரும்புகிறார்.

அதன் பின்னர் ஜெபிக்கும்படியாக அவர் என்னை வழிநடத்தினார். அவருடைய இருதயத்திற்கு என்னை ஏற்றவனாகக் கூடியதாக அவ்விண்ணப்பங்கள் இருந்தன. “ஆண்டவரே, இதோ என் கரங்கள், அவைகளை உமக்கு அர்ப்பணஞ் செய்கிறேன். உம்மைக் கனவீனப்படுத்தக்கூடிய யாதொன்றையும் அவைகள் செய்யாதபடியும், நீர் தொட விரும்பாத எதையும் தீண்டாதபடியும் அவைகள் காக்கப்படுவதாக. இதோ என் பாதங்கள். ஆண்டவரே, அவைகளை உமக்குப் படைக்கிறேன். நீர் தென்படாத இடங்களுக்கு அவைகள் செல்லாமலிருக்கட்டும். ஆண்டவரே, இதோ என் கண்கள், உமது பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்துவதொன்றையும் ஒரு போதும் அவைகள் ஏறிட்டுப் பார்க்க வேண்டாம். உமது நாமத்திற்கு அவமதிப்பான தொன்றையும் என் செவிகள் கேட்க வேண்டாம். நீ கேட்க விரும்பாத எதையும் பேச என் வாய் திறவாதிருப்பதாக. உமது பிரசன்னத்தை அறிந்து பிழைப்பதைப் பாதிக்கக்கூடிய யாதொரு சிந்தனைக்கும், மனோபாவனைக்கும் என் மனம் இடங்கொடாதிருப்பதாக. உம்மால் தூண்டப்படாத எந்த



உணர்ச்சிக்கும் ஊக்கமளிக்காமலும், எவ்வித பாசத்திலும் பற்று வைக்காமலும் என் இருதயம், காக்கப்படுவதாக” ஆமென் என்பதே என் ஜெபம்.

இவ்விதம் நான் பிரார்த்திக்கையில் என் நினைவிற்கு வந்த திருவசனங்களாவன: “ஆகையால் சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாகச் சமர்ப்பிக்க வேண்டும் என்று கடவுளின் இரக்கங்களை முன்னிட்டு உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். இதுவே நீங்கள் செய்யத்தக்க ஆத்மீக ஆராதனை. நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷம்தரியாமல், கடவுளின் நன்மையையும், பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறிவதற்கு ஏதுவாய் உங்கள் மனம் புதிதாவதினால் மறுரூபமாகுங்கள்” (ரோமர் 12:1-2) என்பதும், ஆகையால் “சரீர இச்சைகளுக்கு நீங்கள் கீழ்ப்படிவதற்கேதுவாய் சாவுக்குரிய உங்கள் சரீரத்தில் பாவம் ஆளாதிருப்பதாக. நீங்கள் உங்கள் அவயவங்களை அநீதியின் ஆயுதங்களாகப் பாவத்திற்கு ஒப்புக்கொடாமல், மரித்தோரிலிருந்து பிழைத்திருக்கிறவர்களாய் உங்களை கடவுளுக்கு ஒப்புக்கொடுங்கள். பாவம் உங்கள் மேல் ஆளுகை செய்யாது” (ரோமர் 6:12-14) என்பதுமே.

சிதறப்படாத எனது முழு சிந்தையும் தேவன் பேரிலேயே நிலைநிறுத்தப்பட அவர் எதிர்பார்க்கிறதாக நான் கண்டேன். ஏனையவை அடுத்த ஸ்தானத்திலேயே அமைய வேண்டும். நண்பர், அருமையானவர், குடும்பம், பணம், வேலை முதலியவை நியாயமானவையேயாயினும் இவையாவும் கிறிஸ்துவுக்கே முதல் இடத்தை அளிக்க வேண்டும். இரவு பகலாக என் முழுக்கவனமும் அவர் பேரிலேயே செலுத்தப்பட வேண்டும். தேவனே முதன்மையானவர். அவர் சார்பாக எனது மனோநிலை இப்படிப்பட்டதாகவே இருக்க வேண்டும். அப்பொழுது மாத்திரம் அவர் என்னை ஆசீர்வதித்து செயல்படுத்தக்கூடியதாயிருக்கும். அப்பொழுதே அவருடைய நேசமுள்ள இருதயத்தை நான் திருப்தி செய்யக்கூடும். தேவனோடு எனக்குள்ள உறவின் இடையில் எந்த ஆளும், எந்த விஷயமும் நுழையக்கூடாது என்று கண்டேன். மனைவியின் நேசத்தில் கணவன் முதல் இடம் பெறுவது போல, எனது இருதயத்தில் தேவனே பிரதான ஸ்தானம் பெறவேண்டும். விவாகத்தில் இணைக்கப்பட்டவருள் யாதாமொருவர், அடுத்தவர்பால் தன் முழுக்கவனத்தைச் செலுத்தத் தவறுகையில் விவாகமானது பாக்கியமற்றதாகிறதுபோல தேவனோடிருக்கும் எனது ஐக்கியமும், என் சிதைவுபடாத பக்தியினாலேயே பூரணமடையக் கூடியது. இடைவிடாமல் நான் அவருக்கே காத்திருக்க அவர் எதிர்பார்க்கிறார்.

அந்நாளில் அவர் என்னிடம் கேட்டதை மற்றெல்லாரிடமும் கேட்கிறார். அவருக்கு நம்மேல் உள்ள உரிமையை மறுக்க நாம் துணிவோமா? தமக்கென்று கேட்கும் நமது கவனத்தைப் பெற பாத்திரமான வேறொன்று இவ்வுலகில் உண்டோ? இல்லையானால் அவர் கேட்பவற்றை அவருக்களிக்க ஏன் தயங்குகிறோம்? தேவனுக்குப் புறம்பே மெய்யான இன்பத்தை நாம் கண்டடைய முடியுமோ? பொருள்களினால் நாம் பாக்கியராய் இருக்க முடியுமா? பொருள்கள் நம்மைத் திருப்தி செய்கின்றனவா? ஒருவனுடைய ஜீவன் அவன் செல்வப்பெருக்கத்தில் இல்லை (லூக்கா12:15). தமக்கென்றே தேவன் நம்மைப் படைத்தார். நமது கூட்டுறவையும் ஐக்கியத்தையும் அவர் வாஞ்சிக்கிறார். பொல்லாததும் மாறுபாடுமான சந்ததியாராகிய இவ்வுலகத்தாரின் மத்தியிலேயே நாம் அவருடன் நிமிடம் நிமிடமாக இடைவிடாமல் சஞ்சரிப்பதும், நமது ஆண்டவரை சிலுவையில் அறைந்த இவ்வுலகில் அந்நியரும், பரதேசிகளுமாய் இருப்பதும், அவர் நம்மைப் பற்றிக்கொண்டுள்ள நோக்கமும் சித்தமுமாம். அப்படியிருக்க, எங்ஙனம் நாம் அவரை

ஏமாறச் செய்து அவருடைய புனிதமான அங்கீகாரத்தைப் பெறாமல் போகத் துணிவோம்?

நாம் சமூலமாய் அவருக்கே சொந்தமானவர்களாய் இருக்க தேவன் வாஞ்சிக்கிறார். ஆகவே, நாம் முற்றும் அவருக்குரியவர்களாவென்று நம்மை விசாரிக்கக் கடமைபட்டுள்ளோம். நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது பாகம் மாத்திரமல்ல, நூற்றுக்கு நூறு நம்மை அவருக்குத் தத்தஞ் செய்து இருக்கிறோமா? சமூலமாய் நம்மையே அவருக்கு படைத்து விட்டடோமா? இப்பிரபஞ்சத்திலிருந்தும், நமது குடும்பம் வீடு என்பவையிலிருந்தும் "மாம்சம்" என்று சொல்லக்கூடியவையினின்றும்' நம்மை விலக்கி நமது முழுக்கவனத்தையும், நிந்தையையும், அவர் பேரிலேயே செலுத்தும்படியாக அவற்றை அடியோடே மறந்துவிடச் செய்யும்படிக்கு அவரை வேண்டிக்கொள்வோமாக. நமது மாம்சத்திற்கடுத்த பல விஷயங்கள் நியாயமானவைகளேயாகும். ஆயினும் நாம் முற்றிலும் தேவனுடையவர்களாயிருப்பதற்காக, சில வேளைகளில் தேவனுடைய ராஜ்ய சம்பந்தமான ஊழியத்தை நிறைவேற்றுவதற்காக நீண்ட காலமாய் நமக்கருமையானவர்களினின்று பிரிந்திருக்க நேரிட்டாலும், அவ்வேளைகளில் நமக்கு நியாயமான உறவினர்களை மறுத்துவிட மனமுள்ளவர்களாய் இருக்கிறோமா? அவருடைய கிருபையினால் உலகம் மாம்சமென்பவற்றினின்று அறவே நாம் விலகியிருக்கவும், உள்ளத்தில் வாசம் செய்யும் அவருடைய ஆவியின் பெலத்தால் அவருக்காக மட்டுமே பிழைத்திருக்கவும், இயேசுவையே நமக்கு போதுமானவராகக் கண்டு கொண்டதினால் உள்ளம் பொங்கு "இயேசு என்னைத் திருப்தி செய்கிறார்" என்று போற்றி அவரைப் புகழவும் கூடுமா? இதுவே அவர் எனக்குப் போதித்த விஷயம். இதுவே நாம் சகலத்திலும் தேவனுடையவர்களாயிருந்து அவருடைய இருதயத்திற்கு உகந்தவர்களாயிருக்க வேண்டும் என்பதற்கு விளக்கமாகும்.

அப்படியானால் தேவனுடைய இருதயத்திற்கு ஏற்றவனாக இருப்பதென்றால் அவரையே முதல் ஸ்தானத்தில் நிறுத்தி ஒவ்வொரு வினாடியும் அவருடன் வழிநடந்து, அவருக்குப் பிரியமில்லாத ஒன்றிலும் ஈடுபடாமலிருந்து, அவரைத் துக்கப்படுத்துகிறதொன்றிற்கும் இமந்தராமல் இருப்பதாகும். மேலும் அவருக்கு முன்பாக நீதியும் பரிசுத்தமுமாக ஜீவிக்க, சிதைவுபடாத நமது முழு நாட்டத்தையும் அவர் மேலேயே இருத்தி, எல்லாவற்றிற்கும் மேலாக அவரில் அன்பு கூர்ந்திருப்பதுமேயாகும்.

தாவீது கடவுளுடைய இருதயத்திற்கு ஏற்றவனாக இருந்தான் என்று நாம் அறிவோம். அவனுடைய தவறுதலுக்குப் பின் தாவீது அப்படிப்பட்டவனாக இருக்கக் கூடுமானால் நீயும் நானும் ஏன் அப்படி இருக்க முடியாது? தன்னைத் தீட்டுப்படுத்தலாகாது என்று தானியேல் தன் இருதயத்தில் தீர்மானம் பண்ணிக்கொண்டான் (தானியேல் 1:8). நாமும் தானியேலைப் போலிருப்போமாக. அப்பொழுது கர்த்தர் பெலனளிப்பார்.

இவ்வண்ணமாய் நாம் கிறிஸ்துவின் சாயலில் உருவாகிறோம். அதுவே தேவன் நம்மைக் குறித்துக் கொண்டுள்ள அதிஉன்னத நோக்கமாகும். நாம் அவருடைய குமாரனைப் போலிருந்து அவர் சாயலாக மறுரூபமாக வேண்டும். பத்து வருடங்கள் ஒருவன் கிறிஸ்தவனாயிருந்தும் இன்னும் அவன் குணப்பட்டபோது இருந்ததை விடச் சற்றும் அதிகமாய் கிறிஸ்துவின் சாயலையடையாதிருந்தால் அது மிகவும் துக்கிக்க வேண்டிய காரியம். ஆனால் சிலர் இரட்சிப்பின் அனுபவமடைந்து ஆறு மாதமேயாயினும் அவர்கள் ஆறு வருடகால கிறிஸ்தவர்களைக் காட்டிலும் மேலாக கிறிஸ்துவைப் போலிருக்கிறார்கள். அவருடைய சமுகத்தில் நீண்ட நேரம் தரித்திருக்கிறவர்கள் மட்டுமே அவரைப் போலாகக் கூடும். தங்கள் முழு மனதையும் அவருக்கு அர்ப்பணஞ் செய்கிறவர்கள் மட்டுமே அவரை



உண்மையில் அறிந்து கொள்ளக்கூடும்.

அவருடைய உள்ளத்திற்கு உகந்த புருஷரும் ஸ்திரீகளுமாயிருப்பதற்காக, நமது அரைகுறை பக்தியை அல்ல, பரிபூரண பக்தியை அவருக்குச் செலுத்துவோமாக. வெற்றி பெற நாம் சரணடைய வேண்டும். பிழைக்க நாம் மரிக்க வேண்டும். பெற்றுக்கொள்ள நாம் கொடுக்க வேண்டும்.

ஆ, இப்படிப்பட்ட வாழ்க்கையினால் வரும் இன்பம் எப்படிப்பட்டது! இம்மையில் அதற்கு ஒப்பானது வேறொன்றும் இல்லை. இவ்வுலகில் நாம் பெறும் சித்தி அனைத்தும் அதற்கு ஈடு செய்ய மாட்டாது. அவர் பள்ளத்தாக்கின் "லீலி மலர்", "பிரகாசமான விடி வெள்ளி", "சாரோனின் ரோஜா", "பதினாயிரம் பேர்களில் சிறந்தவர்", "அவர் குறைவிலா நிறையழகர்'', சிநேகிதர் இப்படிப்பட்டவர்களாக இருக்க முடியாது. நமக்கு மிகவும் அருமையானவர்கள் விஷயத்திலும் நாம் ஏமாறுகிறோம். செல்வம் நமக்குத் தாங்க முடியாத பாரங்களைக் கொண்டு வரும். பேர் பிரஸ்தாபத்தினால் நமக்கு வேதனைகள் வரும். தேவன் ஒருபொழுதும் மோசம் போக்குகிறவர் அல்லர். அவருடன் சேர்ந்து வழி நடப்பது, இவ்வுலகில் நமக்கு கிட்டும் இன்பகரமான பாக்கியமே சகலமும் செம்மையாய் இருக்கிறதென்றும், கடவுளுக்கும் நமக்கும் இடையில் ஒன்றும் இல்லை என்றும், எந்தப் பாவமாகிய கறுத்த மேகமும் அவர் முகத்தை நமக்கு மறைக்கவில்லை என்றும் அறிவது, ஆ, அதுவே, மாட்சிமையான மோட்ச பாக்கியமாகும்.

அப்படியானால் அதற்காக ஜெபிப்போம். அதை விரும்புவோம், அவ்வாறே ஜீவிப்போம். "ஆண்டவரே, என்னை உமது இருதயத்திற்கு ஏற்றவனாக்கியருளும்".

## உலக செய்திகள்

- ❒ ஐரோப்பிய நாடுகளில் மிதிவண்டியை உபயோகிக்க ஜனங்களை ஊக்கப்படுத்துகிறார்கள்.
- ❒ உலக வெப்பமயமாதலை தடுக்க சுற்றுசூழல் பாதுகாப்பு மாசு கட்டுப்பாடு இவைகளுக்கு உகந்த வாகனம் மிதிவண்டி என அறிவுறுத்துகிறார்கள்.
- ❒ இங்கிலாந்தில் இலண்டன் மாநகரில் கார் கொண்டு வருவதை கட்டுப்படுத்த மாநகர் எல்லைக்குள் ஓடும் கார்களுக்கு கட்டணம் வசூலிக்கிறார்கள்.
- ❒ இங்கிலாந்து, ஹாலந்து போன்ற நாடுகளில் மிதிவண்டியில் செல்வதற்கு என தனிப்பாதை உள்ளது. முழுஹாலந்தையும் மிதிவண்டியில் சுற்றிவரலாம். இங்கு சைக்கிள்களுக்கு இன்சூரன்ஸ் செய்யப்படுகிறது. ஹாலந்து பிரதமர் சைக்கிளில் தான் பாராளுமன்றம் வருகிறார்.
- ❒ நார்வே நாட்டில் இலவசமாக பயன்படுத்த சைக்கிள்களை நாடெங்கிலும் அரசு வைத்துள்ளது. ஓர் அடையாள அட்டையை இலவசமாக பெற்று சைக்கிளை பயன்படுத்திவிட்டு எங்கு வேண்டுமானாலும் விட்டுச் செல்லலாம், அதை அரசாங்கம் எடுத்து ஒழுங்கு படுத்தி வைக்க குழு ஒன்றை ஏற்படுத்தி உள்ளது.
- ❒ உலகிலேயே அதிகமாக கார்பன் மாசுவை வெளியிடும் நாடுகளில் 3வது இடத்தில் இந்தியா உள்ளது.
- ❒ உலகளவில் அமெரிக்கா, சீனா, ஐரோப்பிய யூனியன், இந்தியா வெளியிடும் புகை மாசுவை குறைக்க ஒப்புக்கொண்டுள்ளன. இந்தியா 2020 ஆண்டுக்குள் 25% என குறைக்க ஒப்புக்கொண்டுள்ளது. இதற்கு நிரந்தர தீர்வு கார் மோட்டார் பைக் போன்ற வாகனங்களின் எண்ணிக்கையை குறைப்பதே

## V.B.S. 2012 - சிறுபிள்ளைகள் சாட்சி

எங்கள் ஊரில் நடைபெற்ற VBSல் கலந்து கொண்டேன் நான் இயேசுவை ஏற்றுக்கொண்டேன். நன்றி — P. மீனா, மீனாட்சிபுரம்

எங்கள் கிராமத்தில் நடைபெற்ற VBS எனக்கு மிகவும் பிரயோஜனமாக இருந்தது. நான் இந்த வசனத்தை ஏற்றுக்கொண்டு இயேசுவுக்காக வாழ வேண்டும் என்று நினைத்துள்ளேன் இயேசுவுக்கு நன்றி — பிரவினா, சின்னநாயக்கன்கோட்டை

நான் இந்து குடும்பத்தில் பிறந்தவள். எங்கள் ஊரில் நடைபெற்ற VBSல் கலந்து கொண்டேன். எனக்குள் இயேசுவுக்கு இடம் கொடுத்தேன். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

வடிவுக்கரசி, பெருமாள்பட்டி

நான் இந்துக்குடும்பத்தில் பிறந்தவள். எங்கள் குடும்பம் பூசாரி குடும்பம். நாங்கள் வெள்ளி, செவ்வாய் கிழமை அன்று கோவிலுக்கு செல்வோம். நாங்கள் இயேசுவை பற்றி தெரிந்து கொண்டதால் நானும் என் குடும்பமும் இயேசுவை ஏற்றுக் கொண்டோம். மகிழ்ச்சியாக இருக்கிறோம். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

சரண்யா, மீனாட்சிபுரம்

எங்கள் கிராமத்தில் நடைபெற்ற மிகவும் VBS பிரயோஜனமாக இருந்தது. பாடல், கதை, வசனம் எனக்கு கற்றுத் தந்தார்கள். நான் இயேசுவை ஏற்றுக்கொண்டேன். கர்த்தருக்கு ஸ்தோத்திரம். — சிவகாமி, விராலிபட்டி

## V.B.S. 2012 - தன்னார்வ ஊழியர்களின் சாட்சி

நான் இந்துக்குடும்பத்தில் பிறந்தவள். கன்னியாகுமரியில் நடைபெற்ற முகாமில் கலந்து கொண்டு இயேசுவை ஏற்றுக்கொண்டேன். அபிஷேகத்தை பெற்றுக்கொண்டேன். நான் ஆலயத்திற்கு சென்று மற்றவர்களுக்கு ஜெபம் செய்வேன். இயேசப்பாவைப் பற்றி மற்றவர்களுக்குச் சொல்லி இயேசுவுக்கு சாட்சியாக மாற்றுவேன். VBS-ல் கலந்து கொண்டு சிறுபிள்ளைகளுக்கு இயேசுவைப்பற்றி அறிவித்தேன். கர்த்தருக்கு ஸ்தோத்திரம். — V. கலைச்செல்வி, பெருமாள்பட்டி

நான் 8 கிராமங்களில் VBS எடுத்திருக்கிறேன். நான் இயேசுவை என் வாழ்வில் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு இரட்சிக்கப்பட்டிருக்கிறேன். எங்கள் ஊரில் நிறைய ஆத்துமாக்கள் இரட்சிக்கப்படவும் ஜெபித்துக்கொண்டிருக்கிறேன்.

மதுபாலா, சின்னமநாயக்கன்கோட்டை

## வல்லமை முகாம் சாட்சி - 2012

இந்த முகாமில் வாலிபப்பிராயத்தில் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதை பற்றி நிறைய பாஸ்டர் அண்ணன்கள் சொன்னது எனக்கு மிகவும் பிரயோஜனமாக இருந்தது. நான் வாழ்வில் நிறைய நல்ல குணங்களை பெற்றுக்கொள்ள மட்டும் தேவனோடு வாழ தீர்மானம் எடுத்திருக்கிறேன். — P. ரோஸி, சத்திரப்பட்டி

நான் நன்றாக படித்து நல்ல வேலை பார்த்து அநேக ஊழியத்தை தாங்குவேன். முடிந்தவரை என் நேசருக்காக ஊழியம் செய்வேன். எனது பள்ளியில் தேவனைப் பற்றி இந்து பிள்ளைகளுக்கு கூறுவேன். அவர்களை இயேசுவின் பாதையில் வழிநடத்துவேன். நான் தினமும் ஜெபம் செய்து வேதத்தை தியானிப்பேன். எனக்கு சமயம் கிடைத்தால் எனது



சொந்தக்காரர்கள் அனைவரையும் ஆண்டவர் பாதையில் நடத்துவேன். நான் எல்லாருக்கும் முன் மாதிரியாக இருக்க விரும்புகிறேன். தேவன்தாமே என்னை பாடல் ஊழியத்திலும் பயன்படுத்துவாராக. — M. கிருபா தனசெல்வி, கூட்டாம்புளி

வெற்றிமுகாம் என் வாழ்வில் உண்மையான வெற்றியைத் தந்தது. என் ஆத்துமா வசனத்தால் பெலன் பெற்றுள்ளது. ஜீவத்தண்ணீர் எனக்கு கிடைத்துள்ளது. வாழ்வில் மிகப்பெரிய மாற்றத்தை இம்முகாம் ஏற்படுத்தியுள்ளது. இதனை ஏற்படுத்திய உங்களை தேவன் தாமே ஆசீர்வதிப்பார். — P. எப்ராயீம் ஜெபக்குமார், தூத்துக்குடி

இந்த முகாம் எனக்கு மிகுந்த ஆசீர்வாமாய் இருந்தது. இந்த முகாமில் கர்த்தருக்காய் எதையாவது சாதிக்க வேண்டும் என்ற எண்ணம் வந்தது. எனக்கு ஊழியம் செய்ய அதிக ஆசையாய் இருக்கிறது. பாட்டு, செய்தி, ஜெபம் அனைத்தும் ஆசீர்வாதமாய் இருந்தது. 18-5-2012 சந்தியா நேரத்தில் அண்ணன் அவர்கள் நிற்க சொன்னார்கள். அதில் பாவத்தை அறிக்கை செய்து ஜெபம் பண்ணினேன். முகாமை விட்டு பிரிந்து செல்ல மனம் இல்லை. உலகத்தின் இன்பத்தை விட்டு கர்த்தரின் அன்பை அறிந்து கொள்ள இது ஒரு நல்ல தருணம். — G.A. ராணி, பொட்டலூரணி

நான் இதுவரைக்கும் இந்த மாதிரியான Camp போனது கிடையாது. இதுதான் First time. இங்க எனக்கு புதுவிதமான அனுபவம் கிடைத்தது. Prayer time, Songs, Message எல்லாமே மிகவும் பயனுள்ளதாக இருந்தது. எனக்கு உங்கள் சுவிசேஷ பணியில் பங்குகொள்ள ஆசையாக உள்ளது. கர்த்தரிடத்தில் அதற்காக ஜெபித்தேன். எனக்குள் ஒரு மாற்றத்தை உணர்ந்தேன். பழைய பாவ வாழ்க்கையில் இருந்து உயிர்த்தெழ கர்த்தர் கிருபை செய்தார். கர்த்தருக்கே ஸ்தோத்திரம் உண்டாவதாக.

ரோஸி தேவசகாயம், பொட்டலூரணி

இந்த கூட்டம் மிகவும் ஆசீர்வாதமாய் இருந்தது. நான் தேவனுக்காக ஊழியத்தைச் செய்ய என்னோடு பேசினார். எங்க வீட்டிலே அதிக பிரச்சனைகளோடு வந்தேன். ஆனால் இந்த முகாமில் கலந்துகொண்டு அதில் சந்தோஷத்துடன் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டேன். — B. எப்சிபா, தூத்துக்குடி

நான் என்னுடைய வாழ்க்கையே ஆண்டவரிடம் ஒப்புவித்துள்ளேன். நான் ஊழியத்திற்காக என்னை தீர்மானித்துவிட்டேன். நான் என்னால் முடிந்த காணிக்கையை ஆண்டவருக்கு தருகிறேன்.

நான் இங்கு வரும்முன் பாவவாழ்க்கைக்குள்ளாக இருந்தேன். இங்கு வந்து நான் என்னை இயேசுவுக்கென்று ஒப்புக்கொடுத்துவிட்டேன். நான் இனி பாவம் செய்ய மாட்டேன். என தீர்மானத்தில் உள்ளேன். — C. தேவராஜன், தூத்துக்குடி

நான் இந்த கிருபையின் ஊழியங்களில் கலந்து கொண்டதற்கு மிகவும் சந்தோஷப்படுகிறேன். நிறைய விஷயங்கள் கற்றுக்கொண்டேன். நான் இனிமேல் இயேசப்பாவுக்காக வாழனும் என்று ஆசைப்படுகிறேன். இயேசப்பாவுக்கா என்னால் முடிந்ததை செய்வேன். என்னுடைய சம்பளத்தில் ஒரு பங்கை இந்த ஊழியத்திற்காக கொடுப்பேன். தினமும் ஒருவருக்காவது இயேசப்பாவைப் பற்றி சொல்லனும் என்று நினைக்கிறேன். நான் வேலை செய்கின்ற Hospital-க்கு வருகிற Patient எல்லாருக்கும் இயேசப்பாவைப் பற்றி சொல்லுவேன். — S. பிரேமா, R. ரெட்டியர்பட்டி

நான் இப்பொழுது படித்துக்கொண்டு இருக்கிறேன். நான் படித்து முடித்துவிட்டு வேலைக்கு செல்லும்போது ஒவ்வொரு மாத சம்பளத்திலிருந்து நான் ஆண்டவருக்கென்று தசமபாகம் கொடுப்பேன். என்னால் முடிந்த காணிக்கைகளை ஆண்டவருக்கென்று செலுத்துவேன். நான் எப்படியாவது முயன்று ஆண்டவரின் தேவலாயத்தை கட்டுவேன். நான் ஆண்டவரை மகிமைப்படுத்தி அவரின் நாமம் உயர நான் அவருக்கென்று ஊழியம் செய்வேன். M. பியூலா, திருமங்கலம்

என்னுடைய தீர்மானம் நன்றாகப்படித்து சிறுபிள்ளைகள் முதல் பெரியவர்களுக்கு ஊழியம் செய்ய ஆசைப்படுகிறேன். ஆண்டவர் இயேசுவைக் குறித்து தெரியாதவர்களுக்கு சொல்ல வேண்டும். R. மோனிகா, சங்கரன்கோவில்

நான் இயேசுவுக்காக வாழ்வேன். அப்பா, அம்மா பேச்சுக்கு கீழ்ப்படிவேன். சினிமா படங்களை பார்க்கமாட்டேன். கெட்ட நண்பர்களோடு சேரமாட்டேன்.

S. லிவிங்ஸ்டன், சங்கரன்கோவில்

தேவனுக்கென்று பக்தி வைராக்கியமாக வாழ தேவன் கற்றுக்கொடுத்தார். விடமுடியாததால் ஒரு காரியத்தை கர்த்தர் காண்பித்து ஒப்புக்கொடுத்து ஜெபிக்க உதவி செய்தார். மேலும் தேவனுக்கென்று ஏதாவது செய்ய வேண்டும் என்ற வாஞ்சையும் ஆவியில் எழுப்புதலை கொடுத்தார். G. ரெபேகா, ஆலங்குளம்

கிருபையின் ஊழியங்களுக்கு எனது மகிழ்ச்சியையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இந்த ஊழியத்திற்கு இதுவரை நான் வந்ததில்லை. இப்பொழுதுதான் முதல்முறையாக வந்துள்ளேன். எனக்கு மிகவும் ஆக இருந்தது. மிகவும் மனபாரத்தோடு வந்தேன். ஆனால் இங்கு வந்தபிறகு மிகவும் மனஅமைதியோடு ஊருக்கு செல்கிறேன். இனிமேல் ஒவ்வொரு வருடமும் இந்த ஊழியத்திற்கு வரனும். இங்குள்ள கூட்டங்களில் கலந்து கொள்ளனும் என்று ஆசைப்படுகிறேன்.

ப. இளங்காமணி, புல்லலக்கோட்டை

எனக்கு இந்த கூட்டம் மிகவும் ஆசீர்வாதமாய் இருந்தது. நான் அன்பில்லாமல் உண்மையான அன்பைத் தேடினேன். ஆனால் இந்தக் கூட்டத்தில் தான் தெரிந்துகொண்டேன். உண்மையான அன்பு என் நேசர் இயேசுவினிடத்தில் மட்டும்தான் உள்ளது என்று நான் ஆண்டவருக்காக எழும்ப வேண்டும் என்பதை உணர்ந்தேன்.

P. பியூலா, தூத்துக்குடி

நான் இந்த முகாமில் அபிஷேகம் பெற்றுக்கொண்டேன். கர்த்தருக்கு காணிக்கை கொடுப்பது எவ்வளவு அவசியம் என தெரிந்து கொண்டேன்.

தனபால் ஜெரேமியா, கூட்டாம்புளி

நான் இனிமேல் தினமும் ஜெபித்து, வேதம் வாசிப்பேன். இங்கே நடந்த செய்திகள் எனக்கு பிரயோஜனமாக இருந்தது. A. கிறிஸ்டி பிரியா ஏழாயிரம்பண்ணை

தளர்ந்துபோன என் விசுவாசம் மீண்டும் உயிர்பெற்றது. இயேசுவின் மேல் அதிக விசுவாசம் பிறந்தது. என்னுடைய க்கு இயேசுவின் அன்பை சொல்லுவேன்.

J. ஜெப பியூலா ஜெனிபர், தூத்துக்குடி

இந்த முகாம் எனக்கு மிகவும் பிரயோஜனமாக இருந்தது. செய்தி நன்றாய் இருந்தது. இனி தினமும் வேதம் வாசித்து ஜெபிப்பேன். கர்த்தருடைய வழியில் நடப்பேன்.

வில்சன்ராஜ், சிவகாசி



இந்த Camp எனக்கு Very Useful ஆக இருந்தது. இந்த Campல் நான் அதிகமாக கற்றுக்கொண்டேன். A. கிரேஸின் ஜடா தூத்துக்குடி

எனக்கு பால்தியாகு பாஸ்டர் கொடுத்த செய்தி மிகவும் பயன்உடையதாக இருந்தது. நான் இங்கு ஜெபிக்க கற்றுக்கொண்டேன். அந்நியபாஷையோடு அபிஷேகம் பெற்றுக்கொண்டேன். A. எப்சிபா, ஜமீன்சல்வார்பட்டி

நான் இதுவரைக்கும் 3 Camp atten பண்ணி இருக்கேன். முதல் இரண்டுமே குதூகல முகாமில இருந்தேன். இதுதான் முதல் முறை ரொம்ப ரொம்ப சந்தோஷமாக இருந்தது. Songs, Message, Prayer ரொம்ப Usefu; ஆக இருந்தது. ஒரு எதிர்பார்ப்போடு வந்திருந்தேன். ஒரு குழப்பத்தோடு இருந்தேன். இப்போ அது தெளிவாச்சி என்னை இயேசுவுக்கே ஒப்பு கொடுத்திட்டேன். J. சந்தியா, தூத்துக்குடி

## மகிமையில் தேவனோடு

அழகப்பபுரம் பணித்தள விசுவாசி திருமதி. அருளம்மாள் 15-7-2012 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்கள். அவர்கள் நமது ஊழியத்தில் தன்னார்வ ஊழியராய் செயல்பட்ட நல்ல விசுவாச தாயார் ஆவார்கள். அவர்களது கணவர் திரு. தர்மலிங்கம் அவர்கள் மற்றும் பிள்ளைகள் ஆறுதலுக்காய் ஜெபியுங்கள்.

## ஜெபியுங்கள்

நமது அத்தியூத்து பணித்தள மிஷனரி சகோதரி. திருமதி. ரூத் ஸ்டீபன் அவர்கள் வேலூர் C.M.C. மருத்துவமனையில் மார்பகபுற்று நோய்க்கான மருத்துவ சிகிட்சை பெற்று வருகிறார்கள். அறுவை சிகிச்சையை எதிர்நோக்கியுள்ளார்கள். அவர்கள் அற்புத சுகத்திற்காய் ஜெபியுங்கள்! மருத்துவ செலவினை தாங்க ஜெபத்துடன் முன்வாருங்கள்.

## *நமது ஊழியங்களை தாங்குவோர் கவனத்திற்கு*

நீங்கள் ஜெபத்துடன் நமது மிஷனெரி ஊழியத்தை, வாலிப, மாணவ, சிறுவர் ஊழியத்தை, ஜெப ஊழியத்தை தாங்க காணிக்கைகள் அனுப்பும் போது வங்கி கணக்குகள் மூலமும் அனுப்பலாம்.

| வங்கி கணக்கு பெயர் | IFS Code | வங்கி பெயர் | கணக்கு எண் |
|---|---|---|---|
| மிஷனெரி ஊழியம்<br>Grace Ministries<br>Grace Ministries | SBIN0007629<br>TMBL0000156 | SBI Bazaar, Tuticorin<br>TMB Ltd., Sipcot Tuticorin | 10237757808<br>156100710400123 |
| வாலிப மாணவர் சிறுவர் ஊழியம்<br>Young Soul Winners Mission | TMBL0000035 | TMB Ltd., Pudukottai. Tuty | 035100710400087 |
| ஜெப ஊழியம்<br>Tabernacle of God Mission | TMBL0000033 | TMB Ltd., Elairampannai. | 033100710400026 |

நீங்கள் அனுப்பும் காணிக்கைகள் யாவும் ஊழியத்தில் வரவு வைக்கப்பட்டு உங்களுக்கு இரசீது அனுப்பப்படும்.

நீங்கள் காணிக்கை அனுப்பியதை 94432-89026 என்ற எண்ணிற்கு SMS மூலமாகவோ அல்லது கடித மூலமாகவோ எங்களுக்கு தெரிவியுங்கள்.